Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-12 26-05-2005 வியாழக்கிழமை ஓசை 97



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11750)

## திருமலையில் கலவரத்தைத் தூண்ட எடுக்கப்படும் முயற்சிகள் எல்லாப் பிரதேசங்களுக்கும் பரவக்கூடிய ஆபத்து!

### - ஐரோப்பிய ஒன்றிய தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

திருகோணமலையில் இனக்கலவரத்தைத் தூண்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் சிறிலங்காப்படையினர் தான் உள்ளனர். இந்த நடவடிக்கை எல்லாப் பிரதேசங்களிலும் பரவக்கூடிய ஒரு ஆபத்தான நிலை உருவாகியுள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறிலங்காவுக்கான தூதுவர், நெதர்லாந்துதூதுவர் ஆகியோருக்கு எடுத்து கூறியுள்ளதாக அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற . சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர்தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறிலங்காவுக்கானதூதுவர், நெதர்லாந்துத் தூதுவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். இதில் தற்போது ஏற்பட்டுவரும் இறுக்கமான சூழ்நிலை பற்றியும், எங்களது நிலைப்பாடுகள் பற்றியும் பேசினோம். குறிப்பாக சர்வதேச சமூகத்தின் பார்வைக்குக் கொண்டுபோக வேண்டிய தேவையின் அடிப்படையில் இன்றைய சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த மூன்று வருடங்களாக யுத்த நிறுத்த உடன்பாட்டிலும் சரி, சமாதான முன்னெடுப்பிலும் சரி எங்கள் மக்கள் எந்தவித நன்மைகளையும் பெறவில்லை. மாறாக மக்கள் மத்தியில் விரக்தியும், நம்பிக்கையீனமுமே ஏற்பட்டு வருகின்றது.

இந்தநிலை இப்போது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது மக்கள் ஒருவித கொந்தளிப்பு நிலையை அடைந்திருக்கிறார்கள்.

அண்மைக்காலமாக இடம்பெறுகின்ற யுத்தநிறுத்த மீறல்கள் சிறிலங்காப்படைகளாலும், அதனுடன் சேர்ந்தியங்குகின்ற

(12ஆம் பக்கம் பார்க்க)



# திருமலை சட்டவிரோத புத்தர் சிலையை அகற்ற வலியுறுத்தி நாளை ஹர்த்தால்

## பல்வேறு அமைப்புக்களும் அழைப்பு

(நமது செய்தியாளர்)

**திருகோணமலை நகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலையை அகற்ற வலியுத்தி நாளை வெள்ளிக்கிழமை பூரண ஹர்த்தால் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி , மன்னார், முல்லைத்தீவு , வவுனியா மாவட்டங்களில் பூரண ஹர்த்தால் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளில் பல்வேறு பொது அமைப்புகளும் ஈடுபட்டுள்ளன.**

ஏற்கனவே இந்தப்புத்தர் சிலையை நேற்று நள்ளிரவிற்கு முன்னர் அகற்றாவிட்டால் இன்று வியாழக்கிழமை பூரணஹர்த்தால் கதவடைப்புப்போராட்டத்தை நடத்தப் போவதாக தமிழ்தேசியக்கூட்டமைப்பு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எமது மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தை இனவாத சக்திகள் திட்டமிட்டு திணிப்பதற்காகவே இவ்வாறான சதித்திட்டங்களை மேற்கொள்வதாகவும் இவ்வாறான சதித்திட்டங்களை முறியடிக்க தமிழ் முஸ்லிம் மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டவேண்டுமெனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத புத்தர் சிலை நிரந்த அமைதிக்கு கேடு!

### -வவுனியா வெ.ச.அ.ஒன்றியம் கருத்து

(வவுனியா)

திருகோணமலை நகரசபைக்கு உரித்தான காணியில் சட்டவிரோதமாக நிறுத்தப்பட்டபுத்தர் சிலையானது மக்களின் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கும் நிரந்தர அமைதிக்கும் சமாதானத்திற்கும் பங்கம் விளைவிக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தச்செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதாக வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் நிலவரம் தொடர்பாக நாளை சனாதிபதி-ஜே.வி.பி கருத்துப் பரிமாற்றம்

(கொழும்பு)

சனாதிபதிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான விசேட சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை சனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி முன்வைக்கும்யோசனைகள் மற்றும் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் முகமாக இந்தச் சந்திப்பு நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதிக்கும், மக்கள் விடுதலைமுன்னணிக்கும் இடையே இடம்பெறும் சந்திப்பில் எடுக்கப்படும் முடிவுகள்குறித்து அன்றையதினம் மாலையே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களுடன் உரையாட சனாதிபதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை புத்தர்சிலை விவகாரம்; ஜூன் 2இற்கு முன் அகற்ற அவகாசம்

(கொழும்பு)

எதிர்வரும்இரண்டாம் திகதி நள்ளிரவு 12 மணிவரைஅகற்ற அவகாசம் வழங்கிய அது ஹர்த்தால் கதவடைப்பு எதிலும் ஈடுபடுவதில்லை எனத் தமிழ்மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. நேற்று திருகோணமலையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. திருகோணமலை நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்புக்கு அமைய சட்டமா அதிபரின் ஆலோசனையை திருகோணமலையின் நகரசபை ஆணையாளருக்குப் பெற்றுக் கொடுத்து எதிர்வரும் இரண்டாம் ஆம் திகதிக்கு முன்னர் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாக அரசாங்கத்தரப்பு உறுதியளித்ததாகக்கூட்டத்தின் பின்னர் கருத்துரைத்த பிரதி அமைச்சர் திலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அதுவரையில் தற்போது புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள இடத்தில் எவ்வித புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற முடிவும் நேற்று எடுக்கப்பட்டதாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருப்பியனுப்பப்படுதலை எதிர்த்து ஜேர்மனில் கண்டன ஒன்றுகூடல்

ஜேர்மனியிலிருந்து இலங்கைக்குத் தமிழர்களைத் திருப்பியனுப்புவதைக்கண்டித்தும் மாமனிதர் சிவராமின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்தும், ஜேர்மனி பிறேமன் நகரில் கண்டன ஒன்றுகூடல் நடைபெறவுள்ளது.பிறேமன் மனித உரிமைகள் அமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.அம்மார்க் பிளட்ஸ்பிறேமன் எனுமிடத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு ஒன்றுகூடல் நடைபெறும்.

### - ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக -

## தேசிய பெருவிளையாட்டு விழா—2005 2006 ஆம் ஆண்டுபெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

தமிழீழ விளையாட்டுத்துறையால் வருடா வருடம் நடாத்தப்படும் தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா 2005 ஆம் ஆண்டுக்கான நான்காவது தேசிய பெருவிளையாட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கு மாற்றப் பட்டுள்ளதாக தமிழீழ விளையாட்டுத் துறை அறிவித்துள்ளது.

வருடாந்தம்தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப்பட்டு வரும்தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப்போட்டிகளில் 2005 ஆம் ஆண்டுக்கான நான்காவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் எமது தாயகப்பகுதிகளில் ஏற்படுத்திய பேரழிவு காரணமாகவும், அவற்றை மீள்கட்டி எழுப்பும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு காட்டிவரும் அசமந்தப்போக்காலும், நிறைவேற்ற முடியாத மனிதாபிமானப் பணிகளால் வடகிழக்கு தாயகப்பகுதி மக்கள் எதிர்நோக்கி வரும் தொடர்ச்சியான சீரற்றஅரசியல் நடவடிக்கைகளாலும், இவ்வாண்டுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# வற்றாப்பளை பொங்கல் தினத்தில் விபத்துக்கள்; பலர் காயம்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகை அம்மன்ஆலயபொங்கல்தினமான கடந்த திங்கட்கிழமை அப்பகுதியில் மூன்றுக்கும்மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் பலர்காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இருந்து கேப்பாப்பிலவு ஊடாக ஆலயம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வாடகைக் காரும், ஆலயத்தில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வந்து கொண்டிருந்த சிற்றூர்தியும் கோப்பாப்பிலவுப்பகுதியில் மோதிக் கொண்டது. இதில் மூன்று பேர் காயமடைந்தனர்.

இதேவேளை வற்றாப்பளை ஆலயப்பகுதியில் ஐஸ்கிறீம் வான் ஒன்று படுத்திருந்த இளம் பெண் மீது ஏறியதில் பெண் படுகாயம் அடைந்தார். இவ் விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களுக்கு விரைந்த காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டதுடன், நீதிமன்ற நடவடிக்கைகாக வாகனங்களையும் தடுத்து வைத்துள்ளனர். இதைத் தவிரமேலும் சிறுசிறு விபத்துக்களும் இடம் பெற்றுள்ளன. (08)

## கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

மன்னார் மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்னார் அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ள இக் கூட்டத்திற்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் வெ.விஸ்வலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். (10)

# அறிவுறுத்தல் கூட்டம்

அடுத்தமாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. (உ/.த) பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் முற்பகல் 9.30 மணிக்கு யா/.வேம்படி மகளிர்உயர்தரப் பாடசாலையில் நடைபெறும். தீவகம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் (கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த) வலயங்களைச் சேர்ந்த பரீட்சைப் பணிகளில் ஈடுபடவுள்ள பரீட்சை மேற்பார்வையாளர்கள், உதவிப்பரீட்சை மேற்பார்வையாளர்கள், இணைப்பு அலுவலர்கள், உதவி இணைப்பு அலுவலர்கள் யாவரும் தவறாது இவ்வறிவுறுத்தல் கூட்டத்தில் பங்குபற்றுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

# முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான மாதாந்தக் கருத்தூட்டல் நிகழ்வு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் வடக்குக் கிழக்கில் ஒருங்கிணைந்த மாதாந்த ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிக்கு மன்னார் உளவளத் துணை கேட்போர் கூடத்தில், மன்னார் மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் செல்வி சோ. கௌரீஸ்வரி தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியும், முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையக்கொடியும் ஏற்றி வைக்கப்பட்டன. வரவேற்புரை, ஆசியுரை, சிறப்புரையைத் தொடர்ந்து முன்பள்ளிச்சிறார்களின் வளர்ச்சிக்கான செயற்பாடுகள்தொடர்பாக ஆராயப்பட்டன.

வடக்குக் கிழக்கைச் சேர்ந்த வலய, பிரதேச, மாவட்ட மட்ட இணைப்பாளர்கள் 45 பேர்வரை கலந்துகொண்ட இந்நிகழ்வில் சிறார்களின் கல்வியிலும், கல்விசாரா செயற்பாடுகளிலுமுள்ள முன்னேற்றம், இவ்வளர்ச்சியில் முன்பள்ளி நிர்வாகத்தின் பங்களிப்பு என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

## வரி விளம்பரம்

### தவறவிடப்பட்டது

சோமசுந்தரம் இளந்திரையன் கிருஸ்ணர்கோயிலடி, மாமூலை, முள்ளியவளைஎன்பவரது தேசிய அடையாள அட்டை. 28.03.2005 ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்புக்கும் -குமுழமுனைக்கும் இடையில் தவறவிடப்பட்டது. வீட்டு முகவரிக்கு. அல்லது கீழ்காணும் முகவரிக்கு கொடுக்கவும். டெஸ்சிமாலா நுண்கலைக் கல்லூரி, புதுக்குடியிருப்பு. (6158)

### முல்லைத்தீவில் இலவசக் கருத்தரங்கு

முல்லை. மாவட்ட அரங்க செயற்பாட்டுக்குழுவினரின் ஒழுங்குபடுத்தலின்கீழ் 2005 பரீட்சையிலே தோற்றவிருக்கும் கலைப்பிரிவு மாணவர்களுக்கான தமிழ், புவியியல் பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 27.05.2005, 28.05.2005 ஆகிய நாட்களில் முல்லைத்தீவும.வியில்நடைபெறவுள்ளது. (6156)

### காணவில்லை

25.05.2005 அன்று தாண்டிக் குளத்திற்கும், ஓமந்தைக்கும் இடையில் யோசப்திருமேனி அந்தோனியாப்பிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (596871984-V), நிரந்தர பயண அனுமதிஅட்டையும் உள்ளிட்ட பேஸ் ஒன்று காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்.தகவல். யோ. கிறிஸ்ரின். (5930)

### நன்றி நவிலல்

மு.இராஜ்குமார் பொதுசுகாதார பரிசோதகர்,புதுக்குடியிருப்பு ஆகிய எனதுஉடமைகள் அடங்கிய பொதியை எமது பணிமனை பொறுப்பு வாய்ந்தஉத்தியோகத்தரிடம் (பொது சுகாதார பரிசோதகர்-ஒட்டுசுட்டான்) கண்டெடுத்து ஒப்படைத்தமைக்காக கற்சிலைமடு அ.த.க.பாடசாலை அதிபர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (6159)

### 10 நிமிடத்தில் படங்கள்!!!

பாஸ்,சகல அடையாள அட்டைப் படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள் யாழ்.ஒளி K.S.R.PHOTOS இல.05 கனகபுரம் தெரு, கிளிநொச்சி. (6202)

### தவறவிடப்பட்டுள்ளது

ஜேம்ஸ்டானியல் றொபின்சன் என்பவருடைய தேசியஅடையாள அட்டையும், நிரந்தர பயணஅனுமதி அட்டையும் 11.05.2005 அன்று கிளிநொச்சிக்கும் திருநகருக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள்டானியல் றொபின்சன் 10ஆம்வட்டாரம், உதய சூரியன் கலையரங்கம், புதுக்குடியிருப்பு என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (6157)

## வேலை வாய்ப்பு

கட்டார்,டுபாய் மற்றும் சவுதி அரேபியா நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு.

35000/= இற்கும் மேலான கொடுப்பனவுகளுடன் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

| | |
|---|---|
| * கணக்காளர் | 50000/= |
| * கொம்பியூட்டர் இயக்குனர் | 40000/= |
| * மேசன் | 35000/= |
| * வாகனசாரதி | 35000/= |
| * மின்இணைப்பாளர் | 35000/= |
| * நீர்க்குழாய் இணைப்பாளர் | 35000/= |
| * மின் ஒட்டுநர் | 35000/= |
| * இயந்திரத் திருத்துநர் | 35000/= |
| * வீட்டுப்பணிப்பெண்கள் | 35000/= |

போன்றவற்றிற்கு தகுதி உடையோர் உடன்தொடர்பு கொள்ளவும். மிகக்குறைந்த விஷாக்களே கையிருப்பில் உள்ளன தொடர்புகளுக்கு.

எயார்லங்கா என்ற பிறைசஸ் லிமிட்டற்றின் ஏகமுகவர்.

தொ.இல:-077.9027836

த.மதன்,
செல்வி அழககம்,
155 ஆம்கட்டை,
N.E.C. முன்பாக,
கிளிநொச்சி.

(6204)

## நூல் வெளியீட்டு விழா

ஆசிரியர்கள்

T. குகராஜ் BSC
S. தயாபரன் NOT
ஆகியோரின் உருவாக்கத்தில்...

பௌதிகவியல் (சிறு குறிப்பு Short Note Boolk க.பொ. த.உயர்தரத்திற்குரியது)

காலம் : 26-05-2005 (இன்று)
நேரம் : பிற்பகல் 3.30 மணி
இடம் : விசுவமடு மகாவித்தியாலயம்.

ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

T. குகராஜ் ஆசிரியரின் மாணவர்கள்.

(5929)

## பணிநிலை வேண்டுகை

தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தில் வாகனசாரதி பணிநிலைக்கு வெற்றிடங்கள் உள்ளன. திறமையும், ஆர்வமும், தகைமையும் உடையோர் 06.06.2005 அன்றுகாலை 10.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

தகைமைகள்:-


40அகவைக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். சகல வாகனங்களையும் ஓட்டுபவராக இருத்தல் வேண்டும். வாகனஅனுமதிப்பத்திரம்இருத்தல் வேண்டும்.

ஆளணி நிர்வாகப்பகுதி,
தமிழர்புனர்வாழ்வுக்கழகம்,
நடுவப்பணியகம்,
(கந்தசாமிகோயில் அருகாமை),
கிளிநொச்சி.

(சி.11988)

## கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 14 - 08 - 1935



ஆண்டவன் அரவணைப்பில் 22 - 05 - 2005

### நாட்டுப்பற்றாளர் சதா. தனபாலசிங்கம்

கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் அளப்பரிய பங்காற்றியவரும் எமது நிறுவனத்தின் ஆலோசகராகிய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய சதா-தனபாலசிங்கம் ஐயா அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். இந்நிலையில், எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன்,அன்னாரின் பிரிவில் துயருற்றிருக்கும் மனைவி, மகள் மற்றும் உற்றார், உறவினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைக்குழு, பணிப்பாளர்,
இணைப்பாளர், பணியாளர்கள்,
கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம்

(5928)

## கண்ணீர் அஞ்சலி

### நாட்டுப்பற்றாளர் சதா. தனபாலசிங்கம்

எமது மாவட்டச்செயலகத்தில் நிர்வாக அலுவலராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.சதா.தனபாலசிங்கம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயருருகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

செயலக நலன்புரிச் சங்கம்,
கச்சேரி,
கிளிநொச்சி.

(சி.11987)

# அல்- ஹைய்தா அமைப்புடன் தொடர்புடைய 82 பேரின் கணக்குகளை சுவிஸ் முடக்கியது

(வோஷிங்டன்)

**ஒசாமா பின்லேடனின் அல்-ஹைய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய 82 பேரின் வங்கிக் கணக்குகளை சுவிற்சர்லாந்து அரசு முடக்கி வைத்துள்ளது.**

அமெரிக்காவில் நியூயோர்க் இரட்டைக் கோபுரத்தின் மீது விமானங்களை மோதியதாக அல்-ஹைய்தா தீவிரவாதிகள் மீது குற்றச் சாட்டுள்ள நிலையில் இச்சம்பவத்துக்கு பின் அல்-ஹைய்தா உட்பட முக்கிய தீவிரவாத அமைப்புகளுக்கு எதிரான வேட்டையையும், நடவடிக்கைகளையும் அமெரிக்கா தீவிரப்படுத்தியது. அல்-ஹைய்தா தலிபான் தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவும் நிதியுதவியும் அளிக்கும் நபர்களின் வங்கிக் கணக்குகளை உலகம் முழுவதும் முடக்க ஐ.நாவில் தீர்மானம் கொண்டு வந்தது.

உலகம் முழுவதிலும் இயங்கும் பல்வேறு தீவிரவாத அமைப்புகள் தங்களின் பணத்தை பாதுகாப்பாக வங்கியில் சேமித்து வைக்கும் நாடாக சுவிற்சர்லாந்து உள்ளது. சுவிஸ் வங்கிகளில் முதலீடு செய்யப்படும் பணத்துக்கு கணக்குகள் கேட்கப்படுவதில்லை. கணக்குப் பற்றிய விபரங்களை ரகசியமாக வைக்கப்படும்

இருப்பினும் ஐ.நா.வில் அமெரிக்கா கொண்டு வந்த தீமானத்தின்படி சுவிஸ் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அல்-ஹைய்தா தலிபான் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய 82 பேரின் வங்கிக்கணக்குகளை இதுவரை முடக்கியுள்ளது. இதன் மதிப்பு ரூ.110 கோடிக்கு மேல் இருக்கும் என்று கணக்கிடப் பட்டுள்ளது.



பாக்தாத்தின் வடமேற்கே 220 கி.மீ அப்பாலுள்ள பிரதேசத்தில் சோதனை நடவடிக்கையின்போது தடுத்துநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஈராக்கியர் ஒருவரின் நெற்றியில் அடையாளப்படுத்தும் இலக்கம் ஒன்றினை அமெரிக்கப்படையினர் ஒருவர் எழுதுகின்றார்.



ஈராக்கியர் ஒருவர் அனுமதிப்பத்திரதுடனான ஆயுதமொன்றிற்கு அளவிற்கு அதிகமான வெடிமருந்துகள் வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் தடுத்து வைத்துள்ள நிலையில் அவரின் தாயார், சகோதரிகள் ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் மன்றாடுகின்றனர் (வ)



வயிறு இடுப்பு ஒட்டிப் பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகளுக்கு சிங்கப்பூர் கிளனீகில்ஸ் மருத்துவமனையில் வெற்றிகரமாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டு தனித் தனியாகப்பிரிக்கப்பட்டன. அபாய கட்டத்தைத் தாண்டிய தன் குழந்தை அஞ்சலியை முத்தமிடும் தந்தை சோபரி. ( அடுத்த படம்) மற்றொரு குழந்தை ஆஞ்சியை கொஞ்சி மகிழும் தாய் அர்மெய்னி.

## அமெரிக்காவுடனான இராணுவ ஒத்துழைப்பை முறித்துக் கொள்வதாக சிரியா அறிவிப்பு

(நியயோர்க்)

தீவிரவாதத்துக்கும், தீவிரவாதிகளுக்கும் உதவி செய்து வருவதாக அமெரிக்கா அநீதியாகக் குற்றஞ்சாட்டி வருவதால் அந்த நாட்டின் இராணுவத்துடனான ஒத்துழைப்பை முறித்துக் கொள்வதாக சிரியா அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான சிரியா தூதர் இமாத் முஸ்தபா இதைத் தெரிவித்தார்.

கடந்த 10 நாட்களில் அமெரிக்க இராணுவம் மற்றும் உளவுப்படையுடனான அனைத்துத் தொடர்புகளையும் முறித்துக் கொண்டதாக அவர் கூறினார்.

சிரியா மீது உள்ள கசப்பை வளர விடுவது என்று புஷ் நிர்வாகம் முடிவு செய்துள்ளதால், அமெரிக்காவுடன் ஏன் நாங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டார்.

ஈராக் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தோம். லெபனானில் இருந்த துருப்புக்களை திரும்பப் பெற்றோம். இருந்தும் எங்களை அமெரிக்கா நம்பவில்லை என்றும் தூதர் கூறினார்.

## ஐக்கிய அரபு அமீரகத்தில் வேலைசெய்ய பள்ளிப்படிப்பு இனித் தேவையில்லை

(துபாய்)

பள்ளிப்படிப்பு முடித்தால்தான் ஆசிய தொழிலாளர்கள் பணிபுரிய முடியும் என்ற சர்ச்சைக்குரிய விதியை நீக்கியுள்ளது ஐக்கிய அரபு அமீரகம்.

இனி ஐக்கிய அரபு அமீரகத்தில் பணிபுரிய பள்ளிப்படிப்புத்தேவையில்லை. இதற்கான முடிவை அந்நாட்டு அமைச்சரவை மேற்கொண்டுள்ளது. தொழிலாளர் மற்றும் சமூக விவகாரங்கள் துறையின் பரிந்துரையின் பேரில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பள்ளிப்படிப்புச் சான்றிதழை ஆசிரிய தொழிலாளர்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்ற விதி 2003 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு எதிர்ப்பு எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

## பி. பி. சி. நிறுவன ஊழியர்களின் வேலை நிறுத்த சிக்கல் தொடர்கிறது

(லண்டன்)

வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி பி.பி.சி. நிறுவன இயக்குநர் விடுத்த வேண்டுகோளை தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளன.


பி.பி.சியில் உலகம் முழுவதும் 27ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். செலவை மிச்சப்படுத்த, நாலாயிரம் ஊழியர்களைக் குறைக்க இந்நிறுவன இயக்குநர் மார்க் தாம்சன் முடிவு செய்து அறிவித்தார். பி.பி.சி. யைச் சேர்ந்த பத்திரிகையாளர் தொழிற் சங்கங்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. கடந்த திங்கள் பி.பி.சி.ஊழியர்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் பி.பி.சி. தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்வுகள் பாதிக்கப்பட்டன.

போராட்டத்தின் மற்றொரு கட்டமாக , மே 31 மற்றும் ஜூன் முதலாம் திகதிகளில் இரண்டு நாட்கள் பி.பி.சி. ஒளிபரப்பை முழுமையாக நிறுத்த ஊழியர் சங்கங்கள் முடிவு செய்துள்ளன. இதைக் கைவிடும்படி மார்க்தாம்சன் விடுத்த வேண்டுகோளை சங்கங்கள் நிராகரித்தன. திட்டமிட்டபடி இரண்டு நாள் வேலை நிறுத்தம் நடக்கும் என்று அறிவித்துள்ளன.



இங்கிலாந்து ராணி எலிசபெத் இப்போது கனடாவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அங்கு ஆல்பிரிட்டோ மாகாண நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ளச் சென்றபோது, பலத்த மழை பெய்தது. இதனால் ராணிக்கு குடை மற்றும் மழைக் கோட் கொடுக்கப்பட்டது. மழைக் கோட்டை அணிந்து குடை பிடித்தபடி ராணி சென்றார். மழை காரணமாக நிகழ்ச்சியை அவர் பாதியில் முடித்துக் கொண்டார்.

## மிகச்சிறந்த நூறுபடங்களில் கமலஹாசனின் நாயகன் படம்



உலகின் மிகச்சிறந்த நூறு படங்களில், கமலஹாசன் நடித்த 'நாயகன்' படமும் இடம் பெற்றுள்ளது.

கடந்த 1927ஆம் ஆண்டுமுதல் 2002ஆம் ஆண்டுவரை உலக நாடுகள் அனைத்திலும் இருந்து வெளிவந்த படங்களில் மிகச்சிறந்த நூறு படங்களை அமெரிக்காவின் 'டைம்' பத்திரிகை தேர்தெடுத்துள்ளது.

அந்தப்பத்திரிகையின் இணையதளத்தில் உலகிலேயே சிறந்த நூறு படங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.அதில் கமலஹாசன் நடித்து மணிரத்னம் இயக்கிய 'நாயகன்' படமும் ஒன்று.



ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஈராக்கியப் படையினர்.

## இரண்டு கார் குண்டுத் தாக்குதல்களில் ஈராக்கில் ஏழு அமெரிக்கப் படையினர் பலி

ஈராக்கில் இடம்பெற்ற இரண்டு கார் குண்டுத் தாக்குதல்களில் ஏழு அமெரிக்கப்படையினர் உயிரிழந்துள்ளனர்.பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதல் ஒன்றில் மூன்று அமெரிக்கப்படையினரும் இதனையடுத்து ஹஸ்வா நகரில் நடத்தப்பட்ட மற்றுமொரு தாக்குதலில் நான்கு அமெரிக்க கடற்படையினரும் பலியாகியுள்ளனர். இதேவேளை மத்திய பாக்தாத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற கார்க்குண்டு வெடிப்பொன்றில் ஐந்து ஈராக்கியர்கள் கொல்லப்பட்டார்கள். இந்தச் சம்பவங்களின் பின்னர் அமெரிக்க மற்றும் ஈராக்கியப் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## இங்கிலாந்தின் 'சன்' பத்திரிகைக்கு எதிராக சதாம் ஹுசைன் வழக்கு தொடரவுள்ளாராம்



(லண்டன்)

சதாம்ஹுசைன் சிறையில் இருக்கும் காட்சிகளைப் படம் பிடித்து வெளியிட்ட இங்கிலாந்து பத்திரிகை நிர்வாகம் மீது வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளதாக சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்திடம் பிடிபட்ட சதாம்ஹுசைன் பாக்தாத் நகரிலுள்ள அமெரிக்க இராணுவ முகாமிலுள்ள சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

அவர் மீது போர்க்கால குற்றங்களில் ஈடுபட்டதற்காக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் சிறையில் அவர் தன் உடைகளைத் துவைப்பது போன்ற காட்சிகளையும், அவர் முழுமையாக உடை அணியாமல் இருக்கும் காட்சியையும் படம் எடுத்து 'சன்' பத்திரிகை வெளியிட்டது.

சிறையில் இருக்கும் போட்டோக்களை வெளியிடுவது மனித உரிமை மீறலாகும் என்று கூறி மனித உரிமைக்குழுக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இதற்கிடையில் 'சன்' பத்திரிகை மீதும் இந்தப் படங்களை பத்திரிகைக்கு கிடைக்கச் செய்த ஒவ்வொருவர் மீதும் வழக்குத் தொடர்வோம் என்று சதாம் ஹுசைன் சார்பில் ஜியாட் அல கசால்நே கூறியிருக்கிறார்.

இதற்கிடையில் 'சன்' நிர்வாகம் வழக்கைச் சந்திக்கத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளது.

அதன் நிர்வாக ஆசிரியர் கிராகாம் டட்மன் கூறுகையில்; ஆயிரக்கணக்கான மனிதர்களை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் சாவதற்குக் காரணமானவர்தான் சதாம் ஹுசைன் என்பதை மக்கள் மறந்து விட்டார்கள் போலத் தோன்றுகிறது. அவர் நவீன கால ஹிட்லராக இருக்கிறார். அவருக்கு நேர்ந்தது எல்லாம் யாரோ ஒருவர் அவர் புகைப்படங்களை எடுத்தது மட்டும்தான் என்றார்.



பிலிப்பைன்சில் இராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி வெடித்துச் சிதறியதில் நான்கு இராணுவ அதிகாரிகள் பலியாகினர். விமானம் வீழ்ந்து சிதறிய நிலையில் காணப்படுகின்றது

# பூநகரிப் பிரதேசத்தில் கிராம தரிசிப்பும்; சமகாலக் கருத்துப்பகிர்வும்

(அலுவலக செய்தியாளர்)

**பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி தேசிய எழுச்சிப்பேரவையினரும், அரசியல்துறையினரும் இணைந்து கிராமம் கிராமமாக மக்கள் தரிசிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைக்குமரன் தலைமையில் பூநகரிப்பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலர் செல்வன் ஆகியோர் மேற்படி கிராம தரிசிப்புகளை மேற்கொண்டு சமகால அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

இதனடிப்படையில் கடந்த 17ஆம் திகதியன்று பூநகரி நல்லூர் சீத்தா குடியிருப்பு மக்களுக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச மண்டபத்திலும், 18, 19ஆம் திகதிகளில் பூநகரிமுட்கொம்பன் கிராமமக்களுக்கு முட்கொம்பன் பொது மண்டபத்திலும், 20ஆம் திகதியன்று பூநகரி கறுக்காய்த்தீவு மக்களுக்கு கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்திலும், 21ஆம்திகதியன்று பூநகரி கொல்லங்குறுச்சி மக்களுக்கு கொல்லங் குறிச்சி பொதுமண்டபத்தில் வைத்தும் மேற்படி கருத்தரங்குகள் இடம்பெற்றன. மேற்படி கருத்தரங்கு நிகழ்வுகளில் பெருமளவானமக்கள்கலந்து கொண்டு கருத்துரைகளை உள்வாங்கியதுடன் கருத்துக்களையும் பரிமாறிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



பல வருடகாலமாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக மக்கள் பாவனைக்குப் பாரிய அசௌகரியங்களுக்குள்ளான நிலையிலிருந்த கிளி. திருநகர் வீதியில் தற்போது புனர்மைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றமையினைப் படத்தில் காணலாம். (படம்-சோதி)

# மன்னார் மாவட்ட தேவைகள் குறித்து ஆராய்வு

(மன்னார்)

மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று மன்னார் சேவாலங்கா காரியாலயத்தில் இடம் பெற்றுள்ளது. இதில் 32இற்கும் மேற்பட்ட மனித நேய நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.இதில் மன்னார் மாவட்ட விவசாயிகள் தமது விவசாயப் பொருட்களை, குறிப்பாக நெல்லினை விற்பனை செய்வது தொடர்பாகவும் வவுனியாவிற்கான இரவு நேர போக்குவரத்து தொடர்பாகவும் மன்னார் மாவட்ட சங்கிலிப்பாலம் புனரமைப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (18)

## கோட்டமட்ட தமிழ்த் தினப்போட்டி

(பூநகரி)

கடந்த திங்கட்கிழமை பூநகரி ம.வி.இல் கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி நடைபெற்றது.

வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, எழுத்து, கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல், இலக்கியம் நயத்தல், இலக்கணப்போட்டி,குறுநாடக ஆக்கம், கவிதை ஆக்கம், சிறுகதை ஆக்கம், பேச்சு, பாவோதல், இசையும் அசைவும், தமிழறிவு வினாவிடைப்போட்டி, சித்திரப் போட்டி என்பன நடைபெற்றன. (34)

# வங்காலை-புதுக்கமம் வரை புதிய வீதிஅமைப்பு

(மன்னார்)

வங்காலை தோமஸ் புரியிலிருந்து புதுக்கமம் வரையான புதியபாதை ஒன்று ஐ.நா. அபிவிருத்தி நிறுவனத்தால 50இலட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி இப்பகுதி மக்களின் போக்குவரத்திற்குப் பேருதவியாக அமைந்துள்ளது. இவ்வீதிக்கான வீதிவிளக்குகளை அமைத்துத் தருவதற்கு நிகொட் நிறுவனம் முன்வந்துள்ளது. (18)

# பொதுச்சந்தையின் சுகாதாரச் சீர்கேட்டை குறைக்க முன்வரக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கந்தபுரம் பொதுச் சந்தை வளாகத்தில் கடமைபுரியும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடமைக்கு சமுகம் கொடுக்காமையின் காரணமாக சந்தை வளாகம் சுகாதார சீர்கேட்டுக்குட்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் முதல் பாவனையாளர் வரை தங்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்தியுள்ளனர்.

சுத்திகரிப்புப் மேற்கொள்ளப்படாததன் கோரிக்கை காரணமாக சந்தைப் பகுதியில் மிகவும் சுகாதார சீர்கேடான முறையில் துர்நாற்றம் வீசுவதாக அவர்கள் தெரிவித்துள் ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் இவ்விடயத்தினை உடன் கவனத்திற்கொண்டு மக்களைத் தொற்று நோய்குள்ளாவதிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சோ)

# உள்ளூராட்சி மன்ற கட்டமைப்பை மறுசீரமைப்புச் செய்யயோசனை

ஆசிய சம்மேளனத்தின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்புக்கள் மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் பொது மக்களுக்கு நிறைந்த பயன் கிடைக்கும் வகையில் அம்பாறை மாவட்டத்தில் பதினைந்து உள்ளூராட்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேசங்களும், கல்முனை மாநகரசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஆசிய சம்மேளன உயர் அதிகாரிகள் நேரடியாகச் சென்று தகவல்களைப் பெற்று வருவதாகவும் அறிய முடிகின்றது.

இத்திட்டம் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டு வெற்றியளித்தால் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் விரிவுபடுத்தப்படுமென உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர். உள்ளூராட்சி மன்றங்களுக்கு நேரடியாக உதவிகளை வழங்கும் பொருட்டே நேரடியாகச் சென்று இந்தத் தகவலைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரு சக்கர உழவியந்திரம் குடைசாய்ந்தது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர்ப் பகுதியில் இருசக்கர உழவு இயந்திரம் ஒன்று குடைசாய்ந்ததனால்.அதனைச் செலுத்தி வந்தவர் சிறுகாயங்களுக்குள்ளானார்.

வெள்ளிக்கிழமை மாலை 4-30 மணிக்கு சிவன் கோவில் பகுதியில் இருந்து கிருஷ்ணன் கோவில் பகுதியில் வீதிவளைவில் வேகத்துடன் வந்து திரும்பமுற்பட்ட போது சாரதியின் கட்டுப்பாட்டை மீறி கானுக்குள் குடை சாய்ந்தது. இதன் போது சாரதி தூக்கி வீசப்பட்டு சிறுகாயங்களுக்குள்ளாகியதுடன் இருசக்கர உழவு இயந்திரம் பலத்த சேதங்களுக்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது. (12)

# மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

(மன்னார்)

மன்னார் முருங்கன் வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறையாக உள்ளது.

இங்கு ஒரு மாவட்ட வைத்திய அதிகாரியும் இரண்டு வைத்திய அதிகாரிகளும் கடமையாற்றுகின்றனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்ற இம்மாவட்டத்தின் வைத்தியசாலையில் ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரிகளை மீள நியமனம் செய்துள்ள போதும் அவர்கள் அடிக்கடி விடுப்பிற் சென்று விடுகின்றனர்.இதனால் இப்பகுதிமக்கள் அவசர நோய்களுக்கு சிகிச்சை பெற முடியாதுள்ளதால் வவுனியா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (18)

-முல்லை. மாவட்டத்தில்-

# போரினால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு கூரைத்தகடுகள் வழங்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 50 பயனாளிகளுக்குக் கூரைத்தகடுகளை வழங்கவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்தி சபை முல்லை. மாவட்ட பணிப்பாளர் ச.கோவிந்தராசா தெரித்தார்.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு யப்பான் நிதியுதவியில் நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுப்பதாகவும் தெரிவித்தார். (20)

# நாம் குள்ளநரிகளுக்கு ஏமாந்த காக்கைக் கூட்டங்களல்ல

## -ஜே. வி. பி. யினருக்கு ஈழவேந்தன்பதிலடி

சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு சட்ட அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில் அவர்களை பயங்கரவாதிகள் என ஜே.வி.பியினர் குற்றம் சுமத்துவது வியப்பளிப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் யப்பானுக்கு விஜயம் செய்த சோமவன்ச அமரசிங்க தலைமையிலான ஜே.வி.பியினர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கள் பற்றிக் கூறும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது; விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் , என்றும் அவர்களின் கட்டளைகளை நிறைவேற்றவே எம்பிக்களான தாம் காத்திருப்பதாகவும் தெரிவித்ததுடன் அவர்களுக்கு பக்கபலமாகவே தாம் பாராளுமன்றத்தில் செயற்படுவதாகவும் புலிகள் அமைப்பும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றே எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பியினர் கூட்டமைப்பினரை பொதுக்கட்டமைப்பில் இணையலாம் என்று கூறுகின்றனர். ஆனால் நாம் குள்ளநரிகளுக்கு ஏமாந்த காக்கைக் கூட்டங்கள் அல்லர். பொதுக்கட்டமைப்பின் கதாநாயகர்கள் விடுதலைப்புலிகளே. ஜே.வி.பி.யினரின் காமாலைக் கண்களுக்கு இவை விளங்குவதில்லை என்று தொடர்ந்து கூறிய ஈழவேந்தன், கௌதமபுத்தர் மீண்டும் இந்த நாட்டில் பிறந்தால் ஜே.வி.பியினரின் நிலைகண்டு கண்ணீர் விடுவார். இவர்களே பொத்துவில், வல்லைப்பகுதிகளில் புத்தர் சிலைகள் முளைக்கக்காரணமானவர்கள் என்றார்.

ஜே.வி.பியினருக்குப் பொய்கூற உரிமை இருக்கின்றது. ஆனால் விடுதலைப்புலிகள் பற்றி விமர்சிக்க அவர்களுக்கு உரிமை கிடையாது. அவர்கள் சட்டரீதியான அங்கீகாரத்தைப் பெற்று தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக விளங்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புகழேந்தியின் ஓவியங்களை பூநகரி மக்கள் பார்வையிட்டனர்

(பூநகரி)

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி நேற்றுக் காலை பத்து மணியளவில் பூநகரி ம.வி இல் அதிபர் பொன்தில்லைநாதன் தலைமையில் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக மங்கல விளக்கினை ஓவியர் புகழேந்தியும், கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளையும் ஏற்றினர். பின்பு தேசிக்கொடியினை பூநகரி சாமிப்புலம் மருத்துவமனை வைத்தியர் பூரணி ஏற்றினார். அதிபரால் பாடசாலைக் கொடி ஏற்றப்பட்டதைத். தொடர்ந்து அகவணக்கமும் இடம் பெற்றது.

பூநகரிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இராசனால் கண்காட்சி மண்டபம் நாடவெட்டித் திறக்கப்பட்டது.

தொடர்ந்து பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பல பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து இவ் ஓவியக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (34)

-தமிழர்களின் இன, மத இருப்பை வேரறுக்கும்-

# பேரினவாதிகளின் செயற்பாட்டுக்கு எதிராக யாழ்.குடாநாட்டில் நாளை ஹர்த்தால்!

(யாழ்ப்பாணம்)

***தமிழர்களின் இன மத இருப்பை வேரறுக்கும் பேரினவாதிகளின் திட்டமிட்ட செயற்பாட்டினைத் தடுத்து நிறுத்த யாழ் மாவட்டம் முழுவதும் பூரண ஹர்த்தால் நாளை நடத்தப்படவுள்ளது. அதேவேளை அத்தியாவசிய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் கடையடைப்பினை மேற்கொள்ளுமாறும் வீதிகளில் ரயர் போட்டு எரிப்பதனை தவிர்க்குமாறும் தமிழ்த் தேசிய மாணவர் மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.***

இது தொடர்பாக யாழ். மாவட்ட தமிழ் தேசிய மாணவர் மன்றம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களை இன மத ரீதியாக கருவறுக்கும் நோக்குடன் காலம் காலமாக இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் மேற்கொண்டு வரும் செயற்பாடுகளின் தொடர் அங்கமாகவே திருகோணமலை பேருந்து தரிப்பு நிலையம் அருகே சட்டத்திற்கு முரணான வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புத்தர் சிலை விவகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்திற்கு மாறாக நகர மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிலையினை அகற்றுமாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இன்று வரை நடைமுறைப்படுத்தப்படாத சூழ் நிலையில் புத்தர் சிலையினை அகற்றுமாறு கோரி யாழ் மாவட்டம் முழுவதும் பூரண கடை யடைப்புக்கு தமிழ்த்தேசிய மாணவர் மன்றம் அழைப்பு விடுக்கின்றது. நாளைய தினம் மட்டும் யாழ். மாவட்டம் முழுவதும் அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்தி ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எமது இனத்தின் இருப்பிற்கான ஆணி வேர்களான இன, மத தனித்துவங்களை சிதைக்கும் நோக்குடன் சிங்கள பௌத்த வெறி பிடித்தவர்கள் திட்டமிட்டு மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு தமிழ் மக்களாகிய நாம் அணை போடாது விட்டால் தமிழர் என்ற ஓர் இனம் இலங்கையில் வாழ்ந்தது என்ற தடயமே இல்லாது ஒழிக்கப்படும் பரிதாப நிலை உருவாகும்.

சிங்கள அரசானது தமிழ் மக்களை ஓரங்கட்டுவதற்காக இன, மத விவகாரங்களை கருவியாகப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்களை உருவாக்கித் தனது திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. ஏது மறியாத பாமர சிங்கள பௌத்த மக்களை தமிழ் மக்களுக்கு எதிராக கிளர்ந்தெழ வைத்து சிங்கள பௌத்த பேரினவாதிகள் குளிர் காய முற்படுகின்றனர் தனியே பெரும்பான்மையான தமிழ் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த திருகோணமலை மாவட்டம் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டு இன்றைய பரிதாபகரமான நிலையாக உருவெடுத்துள்ளது. தமிழ் மக்களாகிய எமது பாரம்பரியமான வளம் மிக்க பூமியினை முழுமையாக பௌத்த சிங்களப் பேரினவாதம் விழுங்க கங்கணம் கட்டி நிற்கின்றது. அந்த கொடியவர்களின் அத்து மீறிய செயற்பாடுகளை அகிம்சை வழியில் எதிர்க்கும் முகமாகவே பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அகிம்சையைப் போதித்த புத்த பெருமான் இன்று ஆக்கிரமிப்பின் சின்னமாக தமிழர்களின் தலை நகரின் நடுவே பலவந்தமாக நாட்டப்பட்டிருக்கின்றார். எமது இன, மத இருப்பிற்கு முடிவு கட்டும் பேரினவாதிகளின் சாவு மணிக்கு எதிராக தமிழ் மக்கள் அகிம்சை வழியில் நீதி பெறமுடியா விட்டால் தொடரும் ஆக்கிரமிப்பை ஆயுத வழியில் தடுத்து நிறுத்தி எமது இன, மத அடித்தளத்தை காப்பாற்ற வேண்டிய சூழ் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெண் வியாபாரிகளால் கலாச்சாரச் சீரழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் வெளிநாட்டு பெண் வியாபாரிகள் கலாச்சாரச் சீரழிவான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

சீனா, தாய்வான், கொரியா போன்ற நாடுகளில் இருந்து வந்து இங்கு நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடும் பெண் வியாபாரிகளே இத்தகைய கலாச்சார சீரழிவான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக யாழ். பொலிசார் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இவ்வாறு கலாச்சார சீரழிவுகளில் ஈடுபடும் வெளிநாட்டு நடைபாதை வியாபாரிகள் தொடர்பான முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும், அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (33)

## யாழ்.பருத்தித்துறை வீதியில் பாலம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் உள்ள மூன்றாம் கட்டைப் பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான மக்கள், தம் போக்குவரத்து தேவைகளுக்காகப் பயன்படுத்தும் இப் பாலம் சேதமான நிலையில் நீண்ட காலமாக காணப்பட்டது. இந்த அபாய நிலையை கவனத்திற் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை அதனைப் புனரமைத்து வருகிறது. (33)

## எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு போராடும் நிலைக்கு சிங்கள தேசம் தள்ளியுள்ளது

-தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர்

(தென்மராட்சி)

போராட்டத்தின் மூலமே எமது உரிமையைப் பெறமுடியும் என்ற நிலையை நோக்கி-சிங்கள தேசம் எம்மை தள்ளியுள்ளதென தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் அருந்தவபாலன் தெரிவித்துள்ளார். மிருசுவிலில் நடைபெற்ற உயர்பாதுகாப்பு வலயம்- மீள் குடியேற்றம் தொடர்பான விசேட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது உரிமைகளையோ, சுதந்திரத்தையோ சிங்கள தேசம் முன் வந்து வழங்கும் என நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்களும் கொடுக்க முன்வரப் போவதில்லை. எனவே போராட்டத்தின் மூலமே எமது உரிமைகளை நாம் பெறமுடியும். சொந்த இடங்களை இழந்து வீடுகளை இழந்து நாதியற்றுத் திரியும் நிலை மாறவேண்டுமெனில் நாம் எழுந்து நின்று போராடியே ஆகவேண்டும்.

மரநிழலிலும், நலன்புரி நிலையங்களிலும், வாடகை வீடுகளிலும் வாழும் எமது சகோதரர்களுக்காக நாம் கண்ணீர் வடிக்கின்றோம். இனி மேலும் இந்த நிலைமையில் நாம் வாழ முடியாது. போராடவேண்டிய நிலையில் நாம் நிற்கின்றோம். அந்தக் கட்டத்தை நாம் அடைந்து விட்டோம்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற இரும்புப் பாலத்தை மக்கள் பலத்தால் நாம் நிர்மூலமாக்குவோம். அதற்காக ஒவ்வொரு தமிழனும் தன்னைப் பலப்படுத்தட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (28)

## வீதிச்சமிக்ஞை குறியீடுகள் வரைய தரம் குறைந்த நிறப்பூச்சுக்கள்

(யாழ்ப்பாணம்)

வீதிச் சமிக்ஞை குறியீடுகளை வரைவதற்காக யாழ். குடாநாட்டிற்கென அனுப்பப்படும் நிறப்பூச்சு வகைகள் தரம் குறைந்தவையாக காணப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலக உயர்அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக வீதிச்சமிக்ஞைக் குறியீடுகளை அடிக்கடி வரைகின்ற போதும் அவை தரம் குறைந்த நிறப்பூச்சு வகைகளைக் கொண்டு வரையப்படுவதனால் சிறிது காலத்திற்குள்ளேயே வரையப்பட்ட குறியீடுகள் உருக்குலைந்து அழிந்து போய்விடுகின்றன.

இது வீதிக்குறியீடுகளை வரையும் பணிகளில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தென்பகுதி வீதிகளில் குறியீடுகளை வரைவதற்குப் பயன்படுத்தப்படும் உயர்ந்த தரமுள்ள நிறப்பூச்சு வகைகளைப் பெற்றுத் தருமாறு யாழ். அரசாங்க அதிபர் கே.கணேசிடம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## தீயணைப்பு சேவையில் வளப்பற்றாக்குறை; தீவிபத்துக்களைக் கட்டுப்படுத்துவதில் இடர்பாடு

-யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் தீயணைப்புச் சேவையில் நிலவுகின்ற வளப்பற்றாக்குறைகள் காரணமாக யாழ். மாநகரப் பகுதியில் ஏற்படுகின்ற தீ விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதில் பெரும் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரப் பகுதியில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்ற போதும் யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படைச் சேவையை விஸ்தரிக்க எவராலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

குறிப்பாக யாழ்.மாநகர சபையிடம் ஒரே ஒரு தீயணைப்பு பம்பியுடன் கூடிய தீயணைப்பு வாகனம் மட்டுமே பாவனையிலுள்ளது இது கடந்த 18 வருடங்களுக்கு முன்பே கொள்வனவு செய்யப்பட்டது. இதில் சுமார்6000 லீற்றர் நீரை மட்டுமே தேக்கி வைக்கக் கூடிய தாங்கி பொருத்தப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் சிறிய தீ விபத்துக்களைக் கூட கட்டுப்படுத்த முடியாத நிலையுள்ளது. இதை விட தீயணைப்புப் படைப் பிரிவிற்கு ஆளணிப் பற்றாக்குறையும் நிலவுகின்றது.

இதனால் யாழ். மாநகர சபையின் தீயணைப்புச் சேவையை திருப்திகரமாக பொது மக்களுக்கு வழங்க முடியாத நிலையுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையின் போது இரசாயன மருந்துப் பயன்பாட்டைக் குறைக்கவும்!

*–உலக சுகாதார ஸ்தாபன யாழ். அதிகாரி அறிவுறுத்து*

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தொற்று நோய் தடுப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இரசாயன மருந்து வகைகளின் பயன்பாட்டை குறைத்துக் கொள்ளுமாறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் யாழ். மாவட்ட அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். சிவராஜா வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து யாழ். மாவட்டத்திலுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் ஆகியோர் அதிக அக்கறையுடன் செயற்படுமாறும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது புற்று நோயாளர்களது எண்ணிக்கையும் சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு இலக்காவோர் தொகையும் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இந் நிலையில் தொற்று நோய்களைத் தடுப்பதற்காக இரசாயன மருந்துகளையும், தொற்று நீக்கிகளையும் விசுறும் போது அதன் விளைவாக புற்று நோய், சுவாச நோய்களுக்கு இலக்காவோர் தொகை மேலும் அதிகரிக்கக் கூடிய அபாயகரமான நிலைமை காணப்படுகின்றது.

எனவே இந் நிலைமையை கவனத்திற் கொண்டு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக இரசாயன மருந்து வகைகளைப் பயன்படுத்தும் முறையை இயன்றளவு குறைத்துக் கொள்ளுமாறு வைத்திய கலாநிதி சிவராஜா மேலும் கோரியுள்ளார். (33)

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு நவீன விபத்துச்சேவைப் பிரிவு அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துச் சேவைப் பிரிவிற்கென தனியான ஒரு பிரிவு நவீன வசதிகளுடன் அமைக்கப்படுவது அவசியமென இவ் வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் தற்போது விபத்துக்களும், அனர்த்தங்களும் அதிகரித்துள்ளன. இவற்றில் பாதிக்கப்பட்டு காயங்களுக்கும், தாக்கங்களுக்கும் உள்ளாவோருக்கு உடனடியாகவே தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டிய தேவையுள்ளது. எனினும் இத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்திலான விபத்துச் சேவைப் பிரிவு ஒன்று யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லாதிருக்கின்றமை பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. சில வேளைகளில் வீண் உயிரிழப்புக்களுக்கும் இது காரணமாகி விடுகிறது. எனவே இந் நிலைமையைக் கவனத்திற் கொண்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரதான வாயிலுக்கு சமீபமாக புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு அதில் நவீன வசளதிகளுடன் கூடிய விபத்துச் சேவைப் பிரிவை இயங்கச் செய்தல் அவசியமெனவும் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (33)

# ஜே.வி.பி. சுதந்திரக் கட்சியின் வலையில் சிக்கியுள்ளதா?

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி க்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்கு இணக்கம் காணாமல் பொது நிலைப்பாட்டை எட்ட முடியாத நிலைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தள்ளப்பட்டுள்ளது. ஜே.வி.பி. யினர் தமது கொள்கைகளில் இருந்து விலகி சனாதிபதியின் கூற்றை ஏற்று நடந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சனாதிபதி அவர்கள் தனது கொள்கையை கைவிட்டு ஜே.வி.பி யினரின் கூற்றினை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி முடியாவிட்டால் இரண்டு கட்சிகளும் விலகி தமது தனிக்கொள்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்.




கூட்டுமுன்னணி அரசு வெற்றிக்குப்பின் இது வரை அரசாங்கத்தினுள் மின்னும் நட்சத்திரமாக ஜே.வி.பி. ஜொலிக்கின்றது. சனாதிபதி அவர்கள் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜே.வி.பி யின் தயவினால் அரசாங்கத்தை நடத்தும் நிலைமைக்கு ஜே.வி.பி யினர் இவர்களைக் கொண்டு வந்துள்ளனர். இதனால் ஜே.வி.பியினரை விரல் நீட்டிக் கதைக்க முடியாத அளவிற்கு சனாதிபதியின் அதிகாரம் செல்லு படியற்றதாக இருந்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி க்குமிடையில் உட்பூசல்கள் ஏற்பட்டவேளையில் அனேக சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களும், சிரேஷ்ட அமைச்சர்களும் சனாதிபதிக்கு ஆதரவு வழங்காமல் ஜே.வி.பி யினருக்கு ஆதரவு வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆனால் தற்பொழுது ஜே.வி.பி யின் செல்வாக்கு கூட்டணி அரசாங்கத்தில் மிகவும் குறைந்து வந்துள்ளது. ஜே.வி.பி யின் தீவிர இனவாத அரசியலால் அரசாங்கத்தினால் எடுக்கும் நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அதிகமானவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆகவே ஜே.வி.பி. அரசாங்கத்திற்குப் பெரும் தலையிடியாக உள்ள தென்பதை சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர்கள் நன்கு உணர்ந்து தற்பொழுது சனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்தி ஜே.வி.பி யினரை மட்டம் தட்டுவதற்குத் தற்பொழுது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

காரணம் ஜே.வி.பி யின் அனுசரணை இல்லாமல் அரசாங்கத்தை நடத்த முடியாத நிலைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர்கள் தள்ளப்பட்டனர். ஜே.வி.பி இல்லையேல் சுதந்திரக் கட்சியும் இல்லை என்ற நிலைக்கு சனாதிபதி தள்ளப்பட்டார். அரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்குப் பெரும்பான்மை அதிகாரம் இருந்தும் தாங்கள் சிறுபான்மை பலம் கொண்டவர்களாக பின் தள்ளப்பட் டுள்ளதை சனாதிபதியும், சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் தற்பொழுது ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அரசாங்கத்தில் ஜே.வி.பி .யினருக்குச் செல்வாக்கு அதிகரித்திருந்தாலும் சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி தனித்து நின்று போட்டியிடும் சக்தி கிடையாது. தற்பொழு துள்ள சூழ்நிலையில் ஜே.வி.பியினர் தனித்து நின்று தேர்தலுக்கு முகம் கொடுப்பார்களானால் அவர்களின் முகவரி இல்லாமல் போய்விடும். இதை இப்பொழுது நன்கு உணர்ந்த சனாதிபதி அவர்கள் தற்பொழுது ஜே.வி.பி யினரை விரட்டி அடிக்கும் யுக்தியை மிக எளிதாகக் கையாண்டு வருகிறார். எனவே ஜே.வி.பியினர் தற் பொழுது சனாதிபதியின் கட்டளைக்கு அடி பணிந்து நடக்காவிட்டால் இவர்கள் அரசியலில் இருந்து பல மைல்களுக்கு அப்பால் தூக்கி எறியப்படுவார்கள். தற்பொழுது திருப்பித்தாக்கும் வல்லமை ஜே.வி.பியினருக்குக் கிடையா தென்பதை சமீபகால அரசியல் நகர்வுகள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

கடந்த 16ஆம் திகதி சனாதிபதி அவர்கள் ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் ஜே.வி.பி யினருக்குக் கொடுத்த அரசியல் அதிரடியினால் ஜே.வி.பி தற்பொழுது உள்ளூர நடுக்கம் கண்டுள்ளதுடன் இது இரண்டாவது தடவையாக ஜே.வி.பி யினருக்கு சனாதிபதியால் கொடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். இவர்களின் கடந்தகால பயங்கரவாத நடவடிக்கைகளைப்பற்றி எடுத்து கூறியதுடன் ஜே.வி.பி யின் நடவடிக்கைகள் இந்த நாட்டில் அதிபயங்கரமானவையென துணிந்து கூறியுள்ளார். இதைவிட ஜே.வி.பி தனது கணவரை கொலை செய்ததையும் பகிரங்கமாகக் கூறி உள்ளார். இதை அவர் நிரூபித்துக்காட்டியுள்ளார். ஆனால் ஜே.வி.பி யினருடன் கூட்டு ஒப்பந்தம் செய்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக விஜயகுமாரதுங்கவின் கொலையை ஐக்கிய தேசியக் கட்சிமேல் சனாதிபதி சந்திரிகா சுமத்தியிருந்தார். இதனால் ஜே. வி.பியினர் குமாரதுங்க வின் கொலையை தாங்கள் செய்யவில்லை என்பதற்கு அவரின் மனைவி சந்திரிகா குமாரதுங்க நற்சான்றிதழ் வழங்கியதைப் பற்றி பெருமை கொண்டனர். ஆனால் கடந்த 16ஆம் திகதி ரூபவாஹினிக்கு அளித்த பேட்டியில் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதை நினைவூட்டப்பட்டுள்ளது. அதாவது ஜே.வி.பியினர் தனது கணவரைக் கொலை செய்தனர் என்பதைத்திட்டவட்டமாக எடுத்துக்கூறியுள்ளார். ஜேவிபி இதை இனி நாட்டு மக்களுக்கு மறைக்க முடியாது.



தற்போதைய சூழ்நிலையில் ஜே.வி.பி யினர் தனது வாலை சுருட்டிக்கொண்டு தான் இருக்க வேண்டும். காரணம் மீண்டும் வாலையாட்டினால் அது நறுக்கப்படும் என்பதை சமீபத்திய சனாதிபதியின் மேடைப்பேச்சுக்களும், ரூபவாஹினி பேட்டியும் நிரூபித்துள்ளன. பொதுத் தேர்தலுக்கு ஜே.வி.பி பயப்படுவது மட்டுமன்றி சனாதிபதியை தற்போது பகைத்துக்கொண்டால் அதனால் ஏற்பட இருக்கும் பின்விளைவுகளைப் பற்றியும் ஜே.வி.பி நன்கு உணர்வதுடன் தாங்கள் பரிசுத்தவான்கள், தங்கள் கைகளில் இரத்தக்கறைகள் படியவில்லை என்று கூறினாலும் அலுமாரியில் அடுக்கி வைக்கப் பட்டுள்ள கோவைகள் மூலம் எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை சந்திரிகாவிடத்தில் இருப்பதால் சனாதிபதியின் புலனாய்வு மற்றும் இலஞ்சஊழல் ஆணைக்குழுவில் இருந்து ஜே.வி.பியினர் தப்பிச் செல்ல முடியாது. சனாதிபதிக்கும், ஜே.வி.பி னருக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஜே.வி.பி தற்போது மிகவும் பலவீனப்பட்டுள்ள நிலையில் உள்ளது. இந் நிலையில் ஜே.வி.பி யினருக்கு எதிராக பாரிய அரசியல் நடவடிக்கைகள் சனாதிபதியால் எடுக்கமுடியும். இந்தியாவில் மீண்டும் ஜே.வி.பி படமெடுத்து ஆடினால் சந்திரிகாவின் மகுடிக்குத் தாக்குப்பிடிக்க முடியாது வீட்டிற்குப் போனால் மனைவியில்லை. தெருவில் நின்றால் தன்னைப் பார்ப்பவர்கள் எவரும் இல்லை என்ற நிலையில் ஜே.வி.பி சுதந்திரக்கட்சியின் வலையில் சிக்கியுள்ளது.

*25. 01. 2005 ராவய சிங்கள வார நாளிதழில் காலிங்க எழுதியது.*

**மொழியாக்கம்:- அ.சக்திவேல்**

# சிறைச்சாலை குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது சவாலாக உள்ளது

## -நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ண

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் இடம் பெற்று வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தற்போதுள்ள சட்டப்படி சவாலாகவுள்ளதாக சிறிலங்காவின் நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைக்குள் நாளாந்தம் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாக சிறிலங்கா நீதியமைச்சு அறிவித்துள்ளது.

தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் சிறைச்சாலைக்குள் எடுத்து வருவதாகவும் இந்த நடவடிக்கைகளுக்கும் சிறைச்சாலை ஊழியர்களுக்கும் தொடர்பிருப்பது தெரியவந்திருப்பதாகவும் நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ண கூறியுள்ளார்.

இவ்வாறான சட்டவி[illegible] வடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தற்போது காணப்படும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தீர்மானித்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இருக்கும் 26 சிறைச்சாலைகளில் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டியுள்ள நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ண சிறைச்சாலைகளில் இடம்பெற்று வரும் சட்டவிரோதச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவது பெரும் சவாலாகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

# பொத்துவில் அறுகம்பை கடற்கரை சுற்றுலா அதிகாரசபையால் சுவீகரிப்பு

(கொழும்பு)

விசேட வர்த்தமானி அறிக்கை ஒன்றின் மூலம் பொத்துவில் அறுகம்பை கடற்கரை பரப்பு சுற்றுலா அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தின் பின் அறுகம்பை பிரதேசத்தின் சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டது. அந்தப் பிரதேசத்தில் காணப்பட்ட பல சுற்றுலா விடுதிகளும் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சுற்றுலா அதிகார சபையினால் விசேட வர்த்தமானி அறிக்கையின் மூலம் அறுகம்பை கரையோரப் பகுதி சுவீகரிக்கப்பட்டமையால் தமது சுற்றுலா விடுதிகளை மீண்டும் அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இத்துறை சார்ந்தோர் தெரிவித்துள்ளனர். விடுதி உரிமையாளர்களுக்கும் சுற்றுலா அதிகார சபையின் தலைவருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் துறை ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

## அடுத்த மாதம் பாராளுமன்றில் பிரேரணை

இலங்கையில் தனியார் துறை ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு அடுத்த மாதம் முதல் அமுல்படுத்தப் படும் என தொழில் அமைச்சர் அத்தாவுட செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

தனியார் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான பிரேரணை அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மாதாந்தம் 20000ரூபாவிற்கு குறைவாக சம்பளம் பெறும் தனியார் துறை ஊழியர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா சம்பள அதிகரிப்பும் நாளாந்தம் சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு 40 சதவீதம் சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### தமக்கு 'பைலட்' நாமத்தைச் சூட்ட தொடருந்து ஓட்டுநர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தொடருந்து ஓட்டுநர்கள் தங்களுக்குப் பைலட் என்ற நாமத்தைச் சூட்ட வேண்டும் என தொடருந்து திணைக்களத்தைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆனால் தற்போது தொடருந்து சட்டத்தின்படி தொடருந்து ஓட்டுநர்களுக்கு "காரட்" என்ற பட்டத்தைத் தவிர்ந்த வேறு எதுவும் தரமுடியாதென சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இவர்களின் கோரிக்கையை மீள் பரிசீலனை செய்யப்போவதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# சேதுசமுத்திரத் திட்டத்தை தடுத்துநிறுத்தக் கோரி சென்னை உயர்நீதிமன்றில் "கான்" அமைப்பு வழக்கு

(கொழும்பு)

**இந்தியாவின் சேது சமுத்திரத்திட்டத்தைத் தடுத்துநிறுத்துமாறு கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்படவிருக்கிறது.**

இந்தியாவில் இயங்கும் கான் (CAN) எனப்படும் கரையோர நடவடிக்கை வலைப்பின்னல் என்கின்ற சூழலியல் அரசசார்பற்ற நிறுவனம் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய விருப்பதாக அறிவித்துள்ளது.

இந்தியாவின் மத்திய அமைச்சரவை சேதுசமுத்திரத் திட்டத்துக்கான தமது அனுமதியை கடந்த 19 ஆம்திகதி வழங்கியிருக்கிறது. இந்த நிலையில், இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து எதிர்த்து வந்த கரையோர நடவடிக்கை வலைப்பின்னல் என்ற அமைப்பு இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு சென்னை உயர்நீதி மன்றத்தைக் கோரவுள்ளது.

இந்தியாவின் மேற்குக்கரையையும், கிழக்குக் கரையையும் இணைக்கும் கடல்வழிப்பாதையொன்றைத் திறக்கும் நோக்குடன், 145 ஆண்டுகளுக்கு முன்னர், 1860 இல் பிரித்தானியத் தளபதி ஒருவரால் முன்மொழியப்பட்ட இந்த யோசனையை தற்போது நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் தீமானித்துள்ளது.

இதன் மூலம் இந்தியாவின் அனைத்துக் கரையோரப்பிரதேசங்களுக்கும் இடையிலான நேரடிக்கப்பல் வழிப்போக்குவரத்து சாத்தியப்படுவதுடன் இந்தியாவின் மேற்குக் கரைக்கும், கிழக்குக் கரைக்கும் இடையிலான பயணத்துக்கு இலங்கைத்தீவைச் சுற்றிவரவேண்டிய தேவை அதற்கு இல்லாமல் போகும். எனினும் இந்தத் திட்டம் பாரிய சூழலியல் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ள கான் அமைப்பு, வங்காள விரிகுடாவையும், பாக்கு நீரிணையையும் மன்னார்குடாவூடாக இணைக்கும் இந்தத் திட்டத்தினால், கடல்வாழ் உயிரினங்கள் பலவும் அழியும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளது.

எனினும் இதனை மறுத்துள்ள இந்தியாவின் மத்திய கப்பல்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு, சேதுசமுத்திரத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய சூழலியல் பாதிப்புக்களைத் தடுத்து நிறுத்தவும் திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரேபியன் கடலையும், வங்காள விரிகுடாவையும், இலங்கையின் வட பகுதிக்கடலூடாக இணைக்கும் இந்தத் திட்டத்தின் மூலம், இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலுள்ள கடலூடாக பாரிய கப்பல்கள் பயணிக்க முடியும்.

24.27 பில்லியன் இந்திய ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்படி, 167 கிலோ மீற்றர் நீளமான கடற்பிரதேசம், 300 மீற்றர் அகலப்படுத்தப்பட்டு, 16.5 மீற்றர் ஆழமாக்கப்படும்.

2008 ஆம் ஆண்டு நிறைவடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின்மூலம், 3050 கப்பல்கள் இந்தப் பாதையைப் பாவிக்கும் நிலை உருவாகும் என்றும், இதன் மூலம் 13 வருடங்களின் பின்னர் ஆண்டொன்றுக்கு 80 மில்லியன் மனித நாட்கள் வேலைவாய்ப்புத் தோற்றம் பெறும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பாலு தெரிவித்துள்ளார்.

# நோர்வே ஆழிப்பேரலை செயற்குழு ஒஸ்லோவில் நடத்திய இசைநிகழ்ச்சி

நோர்வே ஆழிப்பேரலை செயற்குழு கடந்த வெள்ளிக்கிழமை ஒஸ்லோவில் கலை நிகழ்ச்சியொன்றை நடத்தியுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பான பல நடன, இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சிறப்பு விருந்தினராக சான்ட்னெஸ் நகர ஆட்சிமன்ற உறுப்பினர் சிவர்ர ஹெறல்லண்ட் கலந்து சிறப்புரையாற்றினார். அவர் தனதுரையில், ஆழிப்பேரலை செயற்குழுவின் செயற்பாடுகளைப் பாராட்டிப் பேசியதுடன், அனைவரும் இச்செயற்பாட்டிற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன் இந்நிகழ்வில் பங்குபற்றிய கலைஞர்களையும் பாராட்டிப் பேசினார். செயற்குழுவின் சார்பில் எமில் கபரியல் உரையாற்றினார்.





# பாடசாலை நிர்வாகக்கட்டமைப்பை மாற்றியமைக்க உலக வங்கி சிபார்சு

இலங்கையில் பாடசாலை நிர்வாகம் தொடர்பாக புதிய முகாமைத்துவத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு உலக வங்கி 2000மில்லியன் ரூபா நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

தற்பொழுது காணப்படும் பாடசாலை நிர்வாகக்கட்டமைப்பை மாற்றியமைப்பதற்கு உலக வங்கி தீர்மானித்திருப்பதாகவும்,

இதற்கு 2000மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கவிருப்பதாகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இந்தப் புதிய நிர்வாகத் திட்டத்திற்கமைய பாடசாலை ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கும் உரிமை பாடசாலை அதிபருக்கு வழங்கப்படுமெனக் குறிப்பிட்டுள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் பேச்சாளர், தேசிய பாடசாலைகளின் நிதிக்கையாள்கை உட்பட்ட அனைத்து நிர்வாகமும் உயர்மட்டக் குழுவொன்றினால் கண்காணிக்கப்படுமெனக் கூறியுள்ளார்.

# ஜே.வி.பி அமைச்சுக்களின் வளர்ச்சி கடந்தாண்டில் மிகக்குறைவு

**-ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு**

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் கீழிருக்கும் அமைச்சுக்களின் வளர்ச்சி வேகம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் வெளியான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையுடன் [illegible] வருடத்துக்கான ஆண்டறிக்கை[illegible] ஒப்பிடுமிடத்து இந்த வேறு[illegible]டை தெளிவாக அவதானிக்க[illegible] என அக்கட்சியின் பாரா[illegible] உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

அரசாங்க முதலீடுகள் குறைவடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம்,

கூட்டமைப்பு அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யின் பொறுப்பிலிருக்கும் விவசாயத் துறையே அதிகளவில் பின்னடைவுக்குட்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை நம்பி வாழும் பொது மக்களுக்கு நன்மை செய்யப் போவதாக வாக்குறுதியளித்துக் கொண்டு ஆட்சிக்கு வந்த ஜே.வி.பி, நடுக் கடலில் தவிக்கவிட்டாற்போல், விவசாயிகளை இப்போது கைவிட்டு விட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் விவசாயிகள் தங்கள் உற்பத்தியான நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் மேலும் தெரிவித்துள்ளார்.

# தெஹிவளை தொடருந்து குண்டுவெடிப்பு விசாரணை சாட்சிகள் சமுகமளிக்காததால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கொழும்பு தெஹிவளைப் பகுதியில் இடம்பெற்ற தொடருந்துக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கின் முக்கிய சாட்சியாளர் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காததால் மேல் நீதிமன்றம் இந்த வழக்கு விசாரணையை ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கின் முக்கிய சாட்சியாளரான கல்கிசை குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரி ஜெயரட்ணம் கடத்திச்செல்லப்பட்டுள்ள நிலையில், அடுத்த சாட்சியாளரான காவல்துறை அதிகாரி நிலாப்தீன் வெளிநாட்டுக்குப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளார். இதனால் இந்த வழக்கின் விசாரணைகளை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

கடந்த 1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24ஆம் திகதி தெஹிவளை தொடருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருந்த தொடருந்தில் குண்டுவெடித்ததில் பலர் கொல்லப்பட்டிருந்ததுடன், மேலும் பலர் காயமடைந் திருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் பெண்ணொருவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரி பயிலுநர்களை நிரந்தரமாக்கக் கோரிக்கை

(கொழும்பு)

பயிற்சிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட சகல பட்டதாரிகளையும் சட்டப்படி நிரந்தரமாக்குதல் வேண்டும். அரசாங்கம் நிரந்தரமாக்கா விட்டால் தற்பொழுது அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கும் பட்டதாரிகள் அனைவரும் நாடு பூராவும், எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக பட்டதாரிகளின் சங்கத் தலைவர் சந்தனசூரிய ஆராய்ச்சி அறிவித்துள்ளார். தற்பொழுது அரசாங்கம் பட்டதாரிகள் சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகள் இவர்களை நிரந்தரமாக்குவதில் பெரும் சந்தேகத்தை உண்டுபண்ணுவதாக பட்டதாரிகளின் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளை கட்டியெழுப்ப 5-10 ஆண்டுகள் தேவை

**-ஐ.நா.மாநாட்டில் தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவிப்பு**

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தென்கிழக்காசிய நாடுகளைத் தாக்கிய ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட நாடுகளை மீளக்கட்டியெழுப்ப 5 முதல் 10 ஆண்டுகள் வரை தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்ட தொழில் நுட்ப வல்லுநர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

# கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மட்டு.மீனவர்களிற்கு எதுவித அரச நிவாரணமும் வழங்கப்படவில்லை

**-மீனவர்கள் அதிருப்தி-**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிப்புக்குள்ளான மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு இற்றைவரை அரசாங்கத்தால் எவ்வித நஷ்ட ஈடுகளோ, நிவாரணங்களோ வழங்கப்படாதது குறித்து மீனவர்கள் கடும் விசனத்தையும், அதிருப்தியையும் தெரிவிக்கின்றனர். இம்மாவட்டத்தில் ஆழ்கடல் மீனவர்களும், ஆற்று வாவி மீனவர்களும் உயிர்களையும், உடமைகளையும் இழந்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிர்க்கதியான நிலைக்கு உள்ளானவர்களில் மீன்பிடித் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்கிய கல்லடி, நாவலடி, திருச்செந்தூர், சீலாமுனை, முகத்துவாரம், பாலமீன்மடு, வாகரை ஆகிய மீனவக் குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இல்லாமல் கூடாரங்களில் பல்வேறு சிரமங்களுக்கும், அவலங் களுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு அரச சார்பற்ற உள்ளூர், வெளியூர் நிறுவனங்களே உதவிகளைப் புரிந்து வருகின்றன. அரசாங்கத்தின் சார்பாக மதிப்பீடுகள் பலமுறை மேற்கொள்ளப்பட்டும் இது வரை எவ்வித நஷ்ட ஈடுகளோ, அல்லது மீன்பிடி உபகரணங்களோ வழங்கப்படாதது குறித்து பாதிப்புக்குள்ளான மீனவர்கள் கவலையைத் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தின் சார்பில் மீன்பிடி அமைச்சர் கூட வருகைதந்து பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்குத் தங்கள் தொழிலை மீண்டும் ஆரம்பிக்க உடனடியாக உதவிகள் வழங்கப்படும் எனக் கச்சேரியில் இடம் பெற்ற மாநாட்டில் தெரிவித்தார்.

மீனவர்களும் உதவிகள் கிடைக்கும் என நம்பினார்கள். ஆனால் இப்போதுதான் "நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்கின்றோம்" என்று தெரிவிக்கின்றனர். தென்னிலங்கையில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீது மீன்பிடி அமைச்சர் காட்டிய ஆர்வம், அவர்களுக்கு வழங்கிய உதவிகள் வடக்குக் கிழக்கிற்கு மாற்றாந்தாய் மனப் பாங்குடனேயே நடைபெறுகிறதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

# Calling for Tenders

## Teaching Hospital, Jaffna

### Repairs to NTS Principal quarters

01) The Chairaman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for repairs to NTS Principal quarters up to 10 a.m on 14/06/2005. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 7th of June 2005 on payment of non refundable deposit of 2000/=

02) Tenders will be opened immediately after the closing at the office of the Derector, Teaching Hospital, Jaffna.Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

03) Tender forms are issued only to contractors having valid registration in grade M 7 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka.(NCCASL)

04) Sealed tenderes may be dispatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or deposited in the tender box at Teaching Hospital, Jaffna in or before 10 a.m on 14/06/2005.

05) Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

06) For further details please contact Hospital Secretary, T.H.Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

(rp 12014)

# Calling for Tenders

## Teaching Hospital, Jaffna

### Boundary Wall NTS, Jaffna

01) The Chirman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for construction of Boundary wall NTS ,Jaffna up to 10 a.m on 14/06/2005. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 7th of June 2005 on payment of non refundable deposit of 2000/=

02) Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna.Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

03) Tender forms are issued only to contractors having valid registration in grade M 7 and above in the field of building constuction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka.(NCCASL)

04) Sealed tenderes may be dispatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10 a.m on 14/06/2005.

05) Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

06) For further details please contact Hospital Secretary, T.H.Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

(rp 12015)

# Calling for Tenders

## Teaching Hospital, Jaffna

### Tiling to Medical Word No.2 Teaching Hospital,Jaffna

01) The Chairaman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for tiling to medical ward No.2 up to 10 a.m on 14/06/2005. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 7th of June 2005 on payment of non refundable deposit of 2000=

02) Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna.Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

03) Tender forms are issued only to contractors having valid registration in grade M 7 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka. (NCC ASL)

04) Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or deposited in the tender box at Teaching Hospital, Jaffna in or before 10 a.m on 14/06/2005.

05) Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

06) For further details please contact Hospital Secretary, T.H.Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

(rp 12016)

# Calling for Tenders-Teaching Hospital, Jaffna

## Extension and renovation to SICU of ward no.24

01) The Chairaman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for extension and renovation to SICU of ward no.24 up to 10 a.m on 14/06/2005. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 7th of June 2005 on payment of non refundable deposit of 2000/=

02) Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna.Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.

03) Tender forms are issued only to contractors having valid registration in grade M 7 and above in the field of building constuction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National construction Contractors Association of Sri Lanka.(NCCASL)

04) Sealed tenderes may be dispatched either by registered post or hand delivered to Director, T.H.Jaffna or deposited in the tender box at Teaching Hospital,Jaffna in or before 10 a.m on 14/06/2005.

05) Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB, T.H.Jaffna.

06) For further details please contact Hospital Secretary, T.H. Jaffna.

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

(rp 12017)

இந்தியா - பாகிஸ்தான்

# அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் தீர்வு காணலாம்!

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் விவகாரம் உட்பட இந்தியா-பாகிஸ்தான் இடையேயான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியும். இதில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார். இந்த விடயத்தில் நானும், அவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இருக்கிறோம் என பாகிஸ்தான் அதிபர் முஷரப் தெரிவித்துள்ளார்.

### முஷரப் நம்பிக்கை

'டெய்லி டைம்ஸ்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முஷரப் இவ்வாறு கூறியுள்ளார்.


நாங்கள் பதவியில் இருக்கும் போது காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை என்றால், அதன் பின்பு தீர் வு ஏற்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்தியா விரும்பினால் காஷ்மீர் பிரச்சினைக்கு ஓர் ஆண்டில் தீர்வு காணமுடியும். காஷ்மீர் பிரச்சினை



தொடர்பாக இந்தியா-பாகிஸ்தான் இடையே எந்த ஒப்பந்தம் ஏற்பட்டாலும், அதற்கு ச்ர்வதேச உத்தரவாதம் இருக்கவேண்டும்.

காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டுள்ள போர் நிறுத்தம் ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும் என்று கருதுகிறேன் என முஷாரப் கூறினார்.



தமிழகம் குளச்சல் அருகே இவ் வாரம் ஏற்பட்ட கடல் சீற்றத்தால் சேதமான தற்காலிக குடியிருப்பை படத்தில் காணலாம்.

# பீகாரில் குதிரை வணிகத்தால் சட்டசபை கலைக்கப்பட்டது—பிரதமர்

(புதுடில்லி)

பீகாரில் நடந்த சட்டப்பேரவை உறுப்பினர்களின் குதிரை வணிகத்தால் நாட்டுக்கே அவமானம் ஏற்படும் சூழ்நிலை உருவானதால் தான் சட்டசபை கலைக்கப்பட்டது. அதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

பீகாரில் பஸ்வானின் லோக் ஜனசக்தி சட்டசபை உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கி தே.ஜ கூட்டணி ஆட்சி அமைக்க முயன்றதைத் தொடர்ந்து சட்டசபை கலைக்கப்பட்டது.

பீகார் ஆளுநர் அளித்த அறிக்கையை ஏற்று சட்டசபையைக் கலைக்க சனாதிபதிக்கு மத்திய அமைச்சரவை சிபாரிசு செய்தது. அதற்கு சனாதிபதி ஒப்புதல் அளித்து சட்டசபை கலைப்புக்கான பிரகடனத்தை வெளியிட்டார்.

இதற்கு பா.ஜ தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி ஆகிய இருவரும் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தனர். பீகார் சட்டசபை கலைப்பு சனநாயக படுகொலை. பீகார் ஆளுநர் பூடாசிங்கை நீக்க வேண்டும் என்று கூறி இருந்தனர். இதற்குப் பதில் அளித்து ராஜஸ்தான் மாநிலம் ரன்தம்பூர் நகரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் மன்மோகன்சிங் இவ்வாறு கூறினார்.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:8-07-1977

வீரச்சாவு:12-06-1998

திதி:-26.05.2005

**கப்டன் ஈசன்**

**(அருமைச்சந்திரலிங்கம் ஆனந்த்)**

*12-06-1998 இல் எருக்கலம்பிட்டியில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கம்.*

*உன் நினைவால் வாடும்*
*சு. அருமைச்சந்திரலிங்கம் குடும்பம் (துரைமணி)*
*குச்சம் ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*

(6150)

## முக்கிய அறிவித்தல்

லக்சுமிபதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணேசலிங்கம் சுதாயினி என்பவரது O/Lபெறுபேற்று சான்றிதழ்,A/L பெறுபேற்றுச்சான்றிதழ் யாழ். கண்டி,தாய்லாந்து பல்கலைக்கழகசான்றிதழ்கள், கணினிச்சான்றிதழ் என்பன சூட்கேஸ்ஒன்றுடன் பளை சோதனைச்சாவடிக்கும், முறிகண்டிக்கும் இடையில் சனிக்கிழமை (21.05) தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(6201)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



இதந்தர ஒளி ஈந்த
சுதந்திர வர்த்தியொன்று
உரந்தர உயிர் உமிழ்ந்து
நிரந்தரமாகி நிறைந்து விட்ட

**ஐந்தாண்டில்....**

விண்ணிலே யுறைவேழக் கன்றுனை
விழிதனி லொளியென வேற்றியும்;
கண்ணிலே யூற்றுறு வருவிநீர் கொட்டவெனை
கழிசடைகூடிக் கடும்பழி தூற்றியும்;
பண்ணிலா துழறும் பித்தனா யுன்புகழ்
பொழிந்தும், பரவியும், போற்றியும் - வாழ்தலே
மண்ணிலே யுழலும் மானிடப்பிறவியென்
மொழிதனில் மேன்மை யெனக்கொண்டேனே.

**மேஜர் ஈழமணி**

**(வெற்றிவேல் காண்டீபன்)**


காரைநகர், யாழ்ப்பாணம்.

பிறப்பு: 01-01-1980 வீரச்சாவு: 26-05-2000

கலைக்கோன்

(சு-12012)

# சச்சினுக்கு மீண்டும் சத்திரசிகிச்சை நான்கு மாதங்களுக்கு ஆடமுடியாது



இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்டவீரரான சச்சின் டெண்டுல்கர் மீண்டும் நான்கு மாதங்கள் ஓய்வில் இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார். அவருக்கு கடந்த திங்களன்று இங்கிலாந்தில் முழங்கையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை இந்திய கிரிக்கட் சபை செயலர் கருணாகரன் நாயர் தெரிவித்துள்ளார். அவர் எப்போது போட்டிகளில் கலந்து கொள்வார் என கூறமுடியாதாயினும் அவரது வைத்திய அறிக்கை கிடைக்கும் வரை அவர் போட்டிகளில் பங்கேற்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக ஆகஸ்ட்மாதம் சிறிலங்காவில் நடைபெறும் முக்கோணப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்து விடுகிறார். இவர் கடந்த ஆகஸ்ட்டில் நெதர்லாந்தில் பயிற்சியிலீடுபடும் போது முழங்கையில் வருத்தம் இருப்பதை உணர்ந்தார்.அதனால் ஐ.சி.சி.மினி உலகக் கிண்ணத்தொடரில் பங்கேற்காததுடன் பாகிஸ்தான் இங்கிலாந்து அணிகள் கலந்துகொண்ட நட்வெஸ்ட் தொடரில் பங்கேற்கவில்லை. அவர் பூரண ஓய்வில் இருக்க வேண்டும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# எனது துடுப்பாட்டத் திறமையை மீண்டும் நிரூபிப்பேன்–ஸ்ரோஸ்



வங்கதேசத்திற்கு எதிரான தொடரில் எனது துடுப்பாட்டத் திறமையை மீண்டும் நிரூபிப்பேன் என்கிறார் இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர் அன்ருஸ்ரோஸ்.

இங்கிலாந்து அணியின் துடிப்பான இளம் வீரர்களுள் அன்ட்ரூ ஸ்ரோசும் ஒருவர். 2004இல் அறிமுகமாகி இதுவரை ஐந்து டெஸ்ட் சதங்களை கடந்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மூன்று சதங்களோடு 656 ஓட்டங்கள் குவித்தவர். இந்தத் தொடருக்குப் பிறகு இவரால் துடுப்பாட்டத்தில் பெரிய அளவில் ஓட்டம் குவிக்க வில்லை. மிடில்செக்ஸ் கவுண்டி அணிக்காக விளையாடிவரும் இவர் தற்போது மோசமான நிலையில் இருந்து வருகிறார்.

இங்கிலாந்து அணி இன்று வங்கதேசத்துடன் முதல் டெஸ்டில் மோதுகிறது. பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரோஸ் தெரிவிக்கையில்; "எதிர்பார்த்ததை விட என்னால் சர்வதேச அளவில் ஓட்டங்களைக் குவிக்க முடிந்ததில் மகிழ்ச்சி. தொடக்கத்திலே அடித்து ஆடுவதால் இது எளிதில் சாத்தியமாகிறது. தொடர்ந்து வெற்றிகளைக் குவிக்கும் அணிக்காக விளையாடுவதில் ஒரு சுகம் இருக்கிறது. எந்தவித பதற்றமும் இல்லாமல் தெளிவான திட்டத்தோடு களமிறங்கி அசத்தலாம். தென்னாபிரிக்கத் தொடருக்குப் பிறகு எனது துடுப்பாட்டம் குறிப்பிடும் படியாக இல்லை என்பதை உணர்ந்துள்ளேன். இந்தக் குறை வங்கதேசத்திற்கு எதிரான தொடரில் மீண்டும் ஒரு கனவு வீரராக வலம் வருவேன்" என்கிறார் ஸ்ரோஸ்.

# பிரெஞ் ஓபன் டென்னிஸ் ஷரபோவா தடுமாற்றம்



பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவில் நடப்பு விம்பிள்டன் சாம்பியனான ரஷ்ய வீராங்கனை ஷரபோவா கடுமையான போராட்டத்துக்கு பின் வெற்றி பெற்றுள்ளார். சக நாட்டு வீராங்கனை எவ்ஜினியாவை எதிர்கொண்ட அவர் ஆரம்பத்தில் போராட முடியாமல் திணறினார். இதனால் எவ்ஜினியா முதல் செட்டை 7-6 என்ற புள்ளியில் கைப்பற்றினார். ஆனால் அடுத்த இரண்டு சுற்றுகளில் ஷரபோவா கடுமையான போராட்டத்துக்கு பின் 6-2,6-4 என்ற புள்ளியில் வெற்றிபெற்றார். ஷரபோவா முதல் சுற்றிலேயே தடுமாறியது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இன்னொரு போட்டியில் ஸ்பெயின் வீரங்கனை கொஞ்சிதா மார்ட்டினை பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின்6-0, 4-6,6-4 என்ற செட்டில் வெற்றி பெற்றார்.

இன்னொரு முன்னணி வீராங்கனையான மவுரஸ்மோ 6-2, 6-1 என்ற நேர் செட்டில் அவுஸ்திரேலிய வீராங்கனை டோமினி கோபிக்கை வென்றார்.

அதுபோல் ரஷ்ய முன்னணி வீராங்கனை நதியா பெட்ரோவா அமெரிக்க வீராங்கனை மசோனாவை 6-4,6-2 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார்.

# பயிற்சியாளர் தெரிவுக்கு மொகிந்தர் அமர்நாத் கண்டனம்



பயிற்சியாளர் தேர்வு முறை சரியல்ல என்று முன்னாள் வீரர் மொகிந்தர் அமர்நாத் கண்டனம் தெரிவித்துள்ளார்.இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கிரேக் சப்பல் தேர்வு செய்யப்பட்டார்.

பயிற்சியாளர் பதவிக்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் மொகிந்தர் அமர்நாத்தும் போட்டியிட்டார். கிரேக் சப்பல்தேர்வு செய்யப்பட்டதும் அவருக்கு அமர்நாத் வாழ்த்துத் தெரிவித்தார். நான் தேர்ந்தெடுக்கப்படாததில் எனக்கு ஏமாற்றம் ஒன்றும் இல்லை எனவும் அமர்நாத் கூறினார்.

ஆனால் இப்போது கிரேக் சப்பல் புதிய பயிற்சியாளராக தேர்தெடுக்கப்பட்டதை அமர்நாத் குறை கூறியுள்ளார். அவர் நேற்று முன்தினம் என்.டி.டி.வி.என்கிற தனியார் தொலைக் காட்சிக்குப் பேட்டி அளித்தபோது கூறியதாவது; பயிற்சியாளரை தேர்வு செய்ய கடைப்பிடித்தமுறை சரியானதல்ல. கடந்தகால பதிவுகளை வைத்துக்கொண்டு தேர்வு செய்தது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. எதிர்காலத்தில் இது போன்ற முறையை பயிற்சியாளர் தேர்வுக்கு கடைபிடிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன் இவ்வாறு அவர் கூறினார்.

# சிறிலங்கா கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக மோடி



அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொம் மோடி சிறிலங்காவின் புதிய பயிற்றுநராக பதவியேற்றுள்ளார். மோடிவோசெஸ்ட்சயர் கழகஅணியின் பயிற்றுநராகக் கடமையாற்றி வந்தவராவார். செய்தி அச்சுக்குப்போகும் வரை அந்த அணியிலிருந்து அவர் இராஜினாமாச் செய்யவில்லை என்றும் இராஜினாமாச் செய்தால் அதனை ஏற்கத் தயார் என்றும், அக்கழக நிறைவேற்றதிகாரி நியுட்டன் தெரிவிக்கிறார்.

இதற்கிடையில் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளராக இருந்த ரே ஜெனிங்ஸ் தமது அணிக்குப் பயிற்றுநராக வரலாம் என இடைக்கால கிரிக்கெட்சபைத் தலைவர் தர்மதாச தெரிவித்திருந்த போதும், மோடியின் பதவியேற்பு உறுதியாகிவிட்டதாக அவரே தெரிவித்துள்ளார்.

எட்டு டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடியுள்ள மோடி நிறைய ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். மோடியின் பயிற்றுவிப்பின் கீழ்வரும் முதலாவது போட்டியாக ஜூலையில் நடைபெறும் மேற்கிந்தியதீவுகளுனான டெஸ்ட் போட்டி அமையும்.



லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இன்று இங்கிலாந்து –வங்கதேச அணிகளுக்கு இடையே முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் தொடங்குகிறது. இதற்காக நேற்று முன்தினம் வங்கதேசத்தைச் சேர்ந்த 16 வயது வீரர் முஸ்பிகுர் ரஹீம் பயிற்சிக்குத் தயாராகிறார். (அடுத்தபடம்) பந்து வீச்சு பயிற்சியில் நபீஸ் இக்பால்.




# இங்கிலாந்து கிரிக்கெட் அணி வெல்ல முடியா அணியாக மிளிரும்




தமது நாட்டுக்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க வருகை தந்திருக்கும் பங்களாதேஷ் கிரிக்கெட் அணியை வெல்வதன் மூலம் தனது அணி வெல்ல முடியாத அணி என்ற நிலைக்கு வந்துவிடும் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீவ் ஹார்மிஷன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கிழக்கு லண்டனிலுள்ள பாடசாலை நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்; பங்களாதேஷுடனான டெஸ்ட் போட்டியில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் வென்றால் அது நாம் எதிர்பார்ப்பதாகும், நான்கு,ஐந்து நாட்கள் நீடிக்குமாயின் நாம் நன்கு ஆடவில்லை என்பதே கருத்து என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது, பங்களாதேஷ் தனது நாட்டில் ஒரு டெஸ்ட் தொடரைவென்றிருக்கின்றது. ஆனால் இங்கிலாந்தை வெல்வது அவர்களுக்குக் கடினமானதாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

# யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை 60 ஓட்டங்களால் தோற்கடித்தது கிளி. ம.வி.


யாழ். ஸ்கந்தவரோதயாக்கல்லூரி யுடனான கடினப்பந்துப் போட்டியில் 60 ஓட்டங்களால் கிளி.ம.வி அணி வெற்றிபெற்றது.

கடந்த 21ஆம்திகதி அன்று யாழ்.ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 15 வயதுப்பிரிவு அணியினர் கலந்து கொண்டிருந்தனர். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிளி.ம.வி. அணித் தலைவர் வா. சஞ்சீவன் தனது அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். 30 ஓவர்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிளி.ம.வி.அணி 24.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக அணித்தலைவர் வா.சஞ்சீவன் 31 ஓட்டங்களையும், க. சஞ்சீவன் 15 ஓட்டங்களையும், பி.தயாகுலன் 15 ஓட்டங்களையும், ம.ஜனகன் 10 ஓட்டங்களையும், கி.கிருசாந் ஆட்டமிழக்காது 08 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் ராம்சங்கர் நான்கு விக்கெட்டுக்களையும், விஸ்ணுபிரகாஸ் மூன்று விக்கெட்டுக்களையும் கௌதமன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். 130 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 26.5ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த 69 ஓட்டங்களைப் பெற்றது. கிரிதரன் 19 ஓட்டங்களையும், கௌதமன் 12 ஓட்டங்களையும்,ரஜீவன் ஆறு ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அணித்தலைவர் வா. சஞ்சீவன் ஆறு ஓவர்கள் பந்து வீசி, நான்கு ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக எட்டு ஓட்டங்களை மட்டும் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பி.தயாகுலன், க.சஞ்சீவன் கி.கிருசாந் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.


ஸ்கந்தவரோதயா அணி



கிளி. ம.வி. அணி

# முதல் இடத்தை கைப்பற்ற இங்கிலாந்து அணி நம்பிக்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசை பட்டியலில் அவுஸ்திரேலியாவை முந்தி முதல் இடத்தை கைப்பற்றும் வாய்ப்பை பெற்றுள்ளது இங்கிலாந்து.

இங்கிலாந்து அணி, வங்கதேசத்திற்கு எதிராக இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரிலும் விளையாடவுள்ளது. இவ்விரு தொடரின் அனைத்துப் போட்டியிலும் இங்கிலாந்துஅணி வெல்லும் பட்சத்தில் ஐ.சி.சி. தரவரிசை பட்டியலில் முதல் இடத்தை பெறலாம்.முதல் முறையாக அவுஸ்ரேலியாவை முதல் இடத்தில் இருந்து கீழிறக்கலாம். தற்போது 110புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா 132 புள்ளிகளுடன் முதல் இடத்தை தக்கவைத்துள்ளது. 107 புள்ளிகளைப் பெற்றுள்ள இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

| தரவரிசை | அணி | புள்ளி |
|---|---|---|
| 1 | அவுஸ்திரேலியா | 132 |
| 2 | இங்கிலாந்து | 110 |
| 3 | இந்தியா | 107 |
| 4 | பாகிஸ்தான் | 102 |
| 5 | இலங்கை | 100 |
| 6 | தென்னாபிரிக்கா | 100 |
| 7 | நியூசிலாந்து | 97 |
| 8 | மேற்கிந்தியத்தீவு | 73 |
| 9 | சிம்பாப்வே | 41 |
| 10 | வங்கதேசம் | 11 |



**சிந்தனைக்கு**

உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 26-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## நாம் பெருமைப்படலாமா?

யாழ். போனதா வைத்தியசாலையில் 16இற்கும் மேற்பட்ட வைத்திய நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகவும், இதனால், பல சேவைகள் இடம்பெறுவதில்லை எனவும் நோயாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவதாகவும் யாழ். வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது.

ஆனால், இவ்வைத்தியர் பற்றாக்குறையானது தனியாக யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டுமல்ல, வடக்கு–கிழக்கு எங்கும் பொதுவில் காணப்படும் அம்சமே. முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்தியர்களின் பற்றாக்குறை சாதாரண நோயாளர்களைக்கூட பார்வையிட முடியாத அளவிற்கு நெருக்கடி மிக்கதாகவும், சில கடமையில் உள்ள வைத்தியர்கள் சுகவீனம் காரணமாகவோ, வேறு காரணமாகவோ லீவில் சென்றால் அவர்களின் இடங்களுக்குப் பதில் கடமைக்குப் போடுவதற்கு டாக்டர்கள் இல்லாததுமான அவலநிலையே காணப்படுகின்றது.

வடக்கு–கிழக்கில் வைத்தியர்களின் பற்றாக்குறைக்கு இப்பிரதேசங்களில் காணப்படும் வைத்தியர்கள் பற்றாக்குறையை ஈடுசெய்ய அரசாங்கம் அக்கறையற்றுள்ளது என்பது எவ்வளவு உண்மையோ அதேபோன்று தமிழ் வைத்தியர்கள் வடக்கு–கிழக்கில் கடமையாற்ற முன்வராமையும் உண்மையே. வேறொரு விதத்தில் கூறின் வைத்தியர்கள் சிறிதளவேனும் அர்ப்பணிப்புடன் செயற்பட முன் வராமை காரணமாகும்.

வடக்கு–கிழக்கில் அதிலும் குறிப்பாக, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடமையாற்றுதல் என்பது சற்று அதிகமான சேவை மனப்பான்மை கொண்டவர்களினாலேயே முடியும். ஏனெனில், இங்கு கடமையாற்ற வருபவர்களின் துறைசார்ந்த முன்னேற்றம் சற்றுக் கடினமானதாகவே இருக்கும். ஏனெனில், முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள், வசதிகள் ஒருபுறத்தில் கிடைக்கப் பெறாதவையாகவும், மறுபுறத்தில் மறுக்கப்படுபவையாகவுமே உள்ளன.

இதன் காரணமாக, இங்கு பணியாற்ற வருபவர்கள் வசதிகள் குறைந்த பகுதிகளில் கடமையாற்றுவது என்பதோடு, தமது எதிர்கால முன்னேற்றத்திலும் சற்றுப் பாதிப்புக்களை எதிர்நோக்குபவர்களாகவே இருப்பர். ஆனால், ஒன்று இங்கு சேவையாற்ற முன் வருபவர்கள் எவராயினும் தமது மக்களுக்கு: துன்புறும் மக்களுக்கு: அவசியமாக சேவை தேவைப்படும் மக்களுக்கு சேவையாற்றினோம் என்ற மனத்திருப்தியை நிச்சயமாக அடைதல் முடியும்.

ஆகையினால், தென்னிலங்கையிலும், உலகின் பல பாகங்களிலும் சேவையாற்றும் வைத்தியர்கள் முற்றாக அங்கிருந்து புலம்பெயர்ந்து வந்து பற்றாக்குறையுள்ள பகுதிகளில் சேவையாற்ற வேண்டும் என்பதல்ல. காலத்திற்குக் காலமோ அன்றி குறிப்பிட்ட ஓரிரு வருடங்களோ மட்டும் சேவையாற்றினால் மட்டுமே இப்பகுதிகளில் காணப்படும் பற்றாக்குறை நெருக்கடியை ஓரளவேனும் நிவர்த்தி செய்துகொள்ள முடியும்.

இது ஒருபுறம் இருக்க, வடக்கு–கிழக்கிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து வருடாவருடம் பல்கலைக்கழகம் செல்லும் மருத்துவ பீடத்திற்கு மாணவர்கள் தெரிவாகிச் செல்கின்றனர். ஆனால், வருடா வருடம் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறுபவர்களில் சிலர் கூட வருடா வருடம் இப்பகுதிகளுக்குத் திரும்பி வருவதாக இல்லை. இந்நிலையும் மாற்றம் காணவேண்டும். ஏனெனில், இவர்கள் தமது மாவட்டத்தில் சேவையாற்றுவதென்பது தமது குடும்பத்தினருக்கு, தமது உறவினருக்கு, தமது நண்பர்களுக்கு, தமது சுற்றத் தாருக்குச் சேவையாற்றுவதாகும். அதாவது, தான் கல்விபெற உதவியவர்களுக்கு சேவையாற்றுவதாகும்.

சில வேளைகளில் இங்கு சேவையாற்றுபவர்களுக்கு பல்வேறு வசதிக் குறைவுகள் இருக்கக்கூடும். அவர்கள் விருப்பிற்கு மாறான சூழ்நிலை இருக்கவும் கூடும். ஆனால், இவையாவும் அவர்கள் கல்வி கற்றபோதும் அங்கு நிலவிய சூழலே ஆகும். இந்நிலையில், கல்வி கற்ற காலத்தை மனதிற்கொண்டு சேவைக் காலத்திலும் பணிபுரிய முன்வரவேண்டும்.

வடக்கு–கிழக்கில் பணியாற்றுதல் என்பது பொதுவான வைத்தியரின் சேவை என்பதைவிட மேலதிக சேவை ஒன்றாகவும் இருப்பினும்கூட அதற்காக வைத்தியர்கள் சிலர் தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் மறந்து விடலாகாது என்பதும் முக்கியத்துவம் மிக்கதாகும். ஏனெனில், அண்மையில், யாழ். வைத்தியசாலையில் நடந்த ஒருசில சம்பவங்கள் வைத்தியர்கள் பொறுப்பற்ற தனமாக நடந்துகொண்டார்களோ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாய் உள்ளது.

குறிப்பாக, மகப்பேற்றை அடையவிருந்த தாயும், அவரது கருப்பையில் இருந்த சிசுவும் இறக்க நேரிட்ட சம்பவம் ஒன்றைக் குறிப்பிட முடியும். தொடராக மகப்பேற்றுக்கால வைத்திய பரிசோதனைக்கு உட்பட்டிருந்த தாய் ஒருவர் இறுதி நேரத்தில் மரணிக்க வேண்டிய துயரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இதில் மகப்பேற்றை அடையவிருந்த தாயும், அவரது குடும்பமும் உயர் கல்வி பெற்றிருந்த குடும்பம். ஆகையினால், அவர்கள் நோய் குறித்து அசிரத்தையாக இருந்திருக்க வாய்ப்பில்லை. அது மட்டுமல்ல, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஏழு நாட்கள் வரையில் இருந்த நிலையிலேயே தாயும் சேயும் மரணமாகியுள்ளனர்.

இம்மரணத்திற்கு வைத்தியர்களே காரணம் எனக் குற்றம் சாட்டும் நோக்கில் இங்கு இது குறிப்பிடப்படவில்லை. தீவிர கவனம் எடுக்கப்பட்டிருந்தால் தாயையும், சேயையும் அன்றிக் குறைந்தது தாயையாயினும் காப்பாற்றியிருக்க முடிந்திருக்கலாம் என்பது ஐயப்பாட்டுடன் தெரிவிக்கப்படும் கருத்தாகும்.

ஆகையினால், சேவை மனப்பான்மையுடன் வடக்கு–கிழக்கில் கடமையாற்ற வைத்தியர்கள் முன்வருவதோடு, தமது கடமையைப் பொறுப்புடன் ஆற்ற வேண்டும் என்பதே மக்கள் மத்தியில் உள்ள எதிர்பார்க்கையாகும். அவ்வாறு இல்லாதுவிடில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் பெருமளவில் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் உள்ளனர் எனப்பெருமைப்பட்டுக்கொள்ள எதுவுமே இல்லை.

# திருமலை புத்தர் சிலையை அகற்றும் வரை தமிழர்கள் அணிதிரண்டு போராடுவோம்!

### நாளைய ஹர்த்தாலுக்கும் அறைகூவல்

இனக்குரோதத்தையும், மதக்குரோதத்தையும் உருவாக்கும் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றும் வரை தமிழ் மக்கள் அணிதிரண்டு வடக்கு-கிழக்கில் எதிர்ப்பினை வெளிப்படுத்துவோம் என நாளை நடைபெறவுள்ள பூரணஹர்த்தால் எதிர்ப்பு போராட்டத்திற்கான அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், தொழிற்சங்கங் களின் இணையம், மீனவ சமாசம், விவசாயிகளின் சம்மேளனம், மாதர் சங்கங்களின் ஒன்றியம், தமிழ் மாணவர் ஒன்றியம், தேசிய எழுச்சியப் பேரவை என்பன கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழரின் தலைநகரம் திருகோணமலையில் பேரினவாத கும்பல்களினால் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையினால் திருமலை நகரம் பெரும் குழப்பமடைந்து காணப்படுகின்றது. மதவெறி கொண்ட பேரினவாதக் கும்பல்கள் புத்தபகவானின் புனிதத் தன்மையையும் மீறி நகர சந்தைக்கருகில் இதனை நிறுவியுள்ளதன் நோக்கம் கேள்விக்குறியானது. ஏற்கனவே இங்கு புத்தர் சிலைகள் பல அமைக்கப்பட்டிருந்தபோதும் தற்போது நிறுவப்பட்டுள்ள இந்தச் சிலையானது வேண்டுமென்றே கலவரத்தை ஏற்படுத்த சிங்களக் காடையர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

எனவே, இது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் என்றே சொல்ல வேண்டும். தமிழர் பிரதேசங்களை இவ்வாறான செயல் மூலம் அபகரிப்பு செய்யும் ஒரு அரசின் கைங்காரியம் என்றே தமிழர் தரப்பு எண்ணத் தோன்றுகின்றது. நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி புத்தர் சிலை அகற்றப்பட்டால் தீக்குளிப்போமென புத்தபெருமானின் தருமத்தைக் கேள்விக்குறியாக்கி இன்று காவி உடைக்குள் அரசியல் செய்யும் துறவிகளுக்கு தமது துறவறத்தைவிட சுயநல அரசியலும் இனவாதமே மேலோங்கி நிற்கின்றது. எனவே, மக்கள் மத்தியில் இனக்குரோதத்தையும், மதக் குரோதத்தையும் உருவாக்கியிருக்கும் இப்புத்தர் சிலையை அங்கிருந்து அகற்றும் வரை தமிழ் மக்கள் அணிதிரண்டு வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பூரண ஹர்த்தாலை அனுஷ்டித்து அரச இயந்திரத்தை முடக்கி எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். எதிர்வரும் 27ஆம் (நாளை) வெள்ளிக்கிழமை தமிழ் பேசும் அனைவரும் முழுமையாக இவ்வெதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கி தமிழர் தம் இருப்பை உறுதிப்படுத்துவோம். சிறிலங்கா பேரினவாதிகளுக்கும், சர்வதேசத்திற்கும் எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ அனுமதியுங்கள் என [illegible] கூவல்விடுப்போம். எமது கலாச்சாரங்களையும் பண்பாட்டையும் நாம் பேணுவதற்கு எமக்கு உரிமையுண்டு என்பதையும் தெளிவுபடுத்துவோம்.

கிளிநொச்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

ஈழத் தமிழர்களின் தலைநகரம் திருமலையில், தமிழர்கள் செறிந்துவாழும் பிரதேசத்தில் இரவோடு இரவாக பேரினவாதிகள் புத்தர்சிலை ஒன்றை நிறுவியுள்ளனர். தமிழ் மக்கள் பேரவையால் சிலையை அகற்றுவதற்கான கோரிக்கைகள் விடுக்கப்பட்டும் எதுவித பலனும் கிடைக்க வில்லை. கள்ளத்தனமாக நிறுவிய சிலைக்கு புத்தபிக்கு களும், அரச கூலியாட்களும் காவல் காத்து நிற்கின்றார்கள். இந்த அடாவடித்தனத்தை கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சிலையை அகற்றுமாறு கோரிக்கை விடுத்து திருமலை மாவட்ட தமிழ் மக்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இயல்பு நிலைப்புறக்கணிப்புக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றோம். அவர்களின் எழுச்சியுடன் நாமும் இணைகிறோம். நீதிமன்றச் செயற்பாட்டையும் அவமதிக்கும் சமாதான காலத்தில் அவர்களது நயவஞ்சகத் தனத்தை வன்மையாக எதிர்க்கின்றோம்.

நாளை 27ஆம்திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தின் வர்த்தக நிலையங்கள் பயிற்சி நிலையங்கள், அலுவலகங்கள் அனைத்தையும் மூடி தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எமது எழுச்சியை வெளிப்படுத்துவோம். அன்றைய நாளைக் கரிநாளாக கடைப்பிடிக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வெளியிடுள்ள அறிக்கையில்,

பிறரின் நிலத்தை விரும்பாது, பிறரின் உதிரத்தை விரும்பாத புத்த பெருமானுக்கு எங்கள் மண்ணில் சிலை வைத்து எங்கள் உதிரத்தால் அபிஷேகம் செய்ய சிங்கள இனவாதிகள் துடியாகத் துடிக்கிறார்கள். இலங்கை முழுவதையும் சிங்களப் பூமியாக்கி இங்கு வாழும் தமிழர்களைப்பூண்டோடு அழிக்கும் சிங்கள இனவாதிகளின் எண்ணம் வரவரக் கூடிக்கொண்டே செல்கின்றன. இதற்கு திருகோணமலையில் நடைபெறும் புத்தர் சிலைகள் வைப்பும், அதனைத் தழுவிய தமிழர்கள் பலரை வெட்டிக் கொல்வதும் நல்லதோர் எடுத்துக் காட்டாகும். இந்த ஆட்சியாளரினதும், சிங்கள இனவாதிகளினதும் நடவடிக்கைகளை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது.

புத்த பெருமானின் கோட்பாடுகட்கும், உலக நீதிக்கும் மாறாக சிங்கள அரசும், இனவாதிகளும் செய்யும் கொடூரங்கள் உடன் நிறுத்த வேண்டும். தவறினால் பெருமானின் கோட்பாட்டின்படி நாம் செயற்பட நேரிடும். “அதர்மத்தைக் கண்டால் அழி என்பது அம்மதக் கோட்பாடு.’ அதன்படி அதர்ம வழி நின்று எங்கள் மண்ணையும், மக்களையும் சீரழிக்க அரசு விரும்பினால் எம்மினம் அணிதிரண்டு உங்களுக்கு உரிய பாடம் புகட்டுவோம். (சோ, 08)

# பொதுக்கட்டமைப்பு ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை அது குறித்து திட்டவட்டமாக கருத்துக்கூறமுடியாது

### யசூசி அகாஸியிடம் ஜே.வி.பி. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான எந்தவொரு ஆவணத்தையும் இதுவரை நாம் பார்க்கவில்லை. எனவே இது பற்றித் திட்டவட்டமாக எவ்வித கருத்தையும் கூற முடியாது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஸியிடம் தெரிவித்துள்ளார்.

யப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஸியை நேற்று முன்தினம் டோக்கியோவில் வைத்துச் சந்தித்தபோதே ஜே.வி.பியின் தலைவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான எந்த ஒரு ஆவணத்தையும் இதுவரை தாம் பார்க்காத காரணத்தால் பொதுக்கட்டமைப்பின் அமைப்பு தொடர்பில் தமக்கு எதனையும் திட்டவட்டமாக தெரிவிக்க முடியாதபோதும் ஜனநாயக நீரோட்டத்தில் உள்ள அரசாங்கமும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும அமைப்பொன்றும் ஒரே அமைப்புக்குள் செயற்படுவது என்பது தொடர்பில் தமக்கு பல கேள்விகள் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பிற்கு விடுதலைப்புலிகள் அமைப்பினரை இணைத்து கொள்வதென்றால் அவர்கள் தமது அர்ப்பணிப்பைவெளிப்படுத்தும் வகையில் டோக்கியோ பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பலகட்சிமுறையை ஏற்றுக் கொள்ளுதல், மனித உரிமை மீறல்களை நிறுத்துதல், சிறுவர்களை போராளிகளாக இணைத்துக் கொள்வதை நிறுத்துதல் என்பவற்றை செய்தல் வேண்டும் என ஜே.வி.பி யின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறு இருப்பினும் இந்தச் சந்திப்பின்போது ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாஸியினால் பொதுக்கட்டமைப்பின் அவசியம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளதோடு சாமாதான நடவடிக்கைகளுக்கும் பொதுக் கட்டமைப்பிற்கும் இடையில் நேரடித் தொடர்புகள் எதுவும் இல்லை என்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணப் பணிகளை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கே பொதுக்கட்டமைப்பு தேவைப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (32)

# புத்தர்சிலைகள் அமைக்கும் நடவடிக்கைகள் இனவன்முறைகளை தூண்டும் செயல்!

### –பள்ளிவாசல் சங்க சம்மேளனம் கண்டனம்

(திருகோணமலை)

கிழக்கில் புத்தர் சிலைகள் அமைக்கப்படுவதற்கு அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல் சம்மேளனம் கடும் ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளது.

திருகோணமலையிலும், பொத்துவிலிலும் புத்தர் சிலைஅமைக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில்சம்மேளனத்தலைவர் ஏ சி ஏ எம் புகாரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதில் புத்தர் சிலை நிறுவல் அமைக்கும் நடவடிக்கைகள் இனவன்முறைகளை தூண்டும் செயல்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

# புத்தர்சிலையை தற்காலிகமாக அகற்ற பொலிசார் தொடர்ந்து முயற்சிக்கவேண்டும்

## -திருமலை நீதவான் நேற்று மீண்டும் உத்தரவு

(திருமலை)

திருமலை புத்தர்சிலையைத் தற்காலிகமாக அகற்ற நகர சபையின் ஒத்துழைப்புடன் பொலிசார் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் என திருமலை நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக திருகோணமலைப் பொலிசார் சமர்ப்பித்திருந்த மனு மீண்டும் நேற்றுப் புதன்கிழமை திருகோணமலை நீதவானும், மேலதிக மாவட்ட நீதிபதியுமான எம். கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் அடுத்து நீதபதி கணேசராஜா தனது கட்டளையில் "இவ் விவகாரம் தொடர்பாக புத்தர்சிலையைத் தற்காலிகமாக அகற்றுவது குறித்து நான் மே 18 இல் பிறப்பித்த கட்டளையை நிறைவேற்றுவதற்கு நகரசபையின் ஒத்துழைப்புடன் பொலிசார் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று தெரிவித்தார்.

நேற்றுப் புதன்கிழமை விசாரணையின்போது பொலிசாரின் மனுவில் காட்டப்பட்டிருந்த கட்சிக்காரர்களான திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்கினேஸ்வரன், முச்சக்கர வண்டிகள் சங்கச் செயலாளர் கீர்த்தி பிரியலால் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். நகர சபை மற்றும் பேரவை சார்பில் சட்டத்தரணியாக. அ.ஜெகசோதி மற்றும் சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

குற்றவியல் கோவை சட்டத்தின் 81ஆம் பிரிவின்படி இரண்டு கட்சிக்காரர்களையும் பிணையில் விட வேண்டும் என்று உதவிப் பொலிஸ் அதிபர் பிரியந்த வீரசேகரா விண்ணப்பித்தார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் நீதிபதி, பொலிசாரின் விண்ணப்பம் சட்டத்திற்கு அமைவாக இல்லை என்ற முடிவுக்கு மன்று வருவதாகக் கூறினார். "எனவே பொலிசாரின் விண்ணப்பத்தை மன்று நிராகரிக்கின்றது. பொலிசாரினால் மனுவில் காட்டப்பட்ட இரு கட்சிக்காரர்களையும் மன்று இவ் வழக்கிலிருந்து விடுவிக்கின்றது'' என்று நீதிபதி கணேசராஜா தனது கட்டளையில் தெரிவித்தார்.

புத்தர்சிலை விவகாரம் குறித்து நீதிபதி கணேசராஜா தனது கட்டளையில் தெரிவித்ததாவது:-

"ஏற்கனவே இவ் வழக்கில் மே 18 இல் திருமலையில் ஏற்பட்ட பாரதூரமான சூழ்நிலையில் சில அறிவுறுத்தல்களை இம்மன்று பிறப்பித்திருந்தது. இவ் வழக்கில் உணர்வு பூர்வமான விடயங்களை விட சட்ட விரோதமான விடயங்களை அறிய மன்று விரும்புகின்றது.

"இவ் வழக்கில் நகர சபை நிர்வாகம் பொலிஸ் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளது.இம் முறைப்பாட்டின் அடிப்படையில் இப் புத்தர் சிலை எங்கே அமைந்துள்ளது.

அதனை அகற்ற முடியுமா? இல்லையா? என்பது குறித்து சட்ட பூர்வமான நடவடிக்கை ஒன்றை விரை வில் எடுக்க வேண்டும் என்று மன்று கட்டளையிடுகின்றது.

"சட்ட விரோதமாக எந்த விதமான சமயக் கட்டடங்கள், வேறுவேறு கட்டடங்கள் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப் படுமாயின் நகர சபையால் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மன்று கட்டளையிடுகின்றது.

நான்காம் கட்சியின் சட்டத்தரணியும்உதவிப் பொலிஸ் அதிபரும் குறிப்பிட்ட புத்தர்சிலை சட்ட விரோதமாக அமைக்கப்பட்டது என்று சமர்ப்பணம் செய்துள்ளனர். மேலும் இப் புத்தர்சிலை பௌத்த தர்மம், ஆகமம் என்பவற்றுக்கு அமைவாக உள்ளதா என்று கேட்டதற்கு நேரடியாக எந்த விதமான பதிலுமளிக்கப்படவில்லை.

"மேலும் நான் ஏற்கனவே இட்ட கட்டளை தொடர்பான பொலிசார் கூடுதலான முயற்சி எடுத்துள்ளனர். மேலும் அக் கட்டளையை நிறைவேற்றுவதற்கான சட்ட நடவடிக்கையை நகர சபையின் ஒத்துழைப்புடன் தொடர்ந்து பொலிசார் முயற்சிக்க வேண்டும் என்று மன்று கட்டளையிடுகின்றது. இவ்வாறு நீதிபதி கணேசராஜா தனது தீர்ப்பில் தெரிவித்தார். (25)

# வீரகேசரி இணை ஆசிரியருக்கு கொலை அச்சுறுத்தல்!

## பாதுகாப்பளிக்க அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

வீரகேசரிவாரஇதழின் இணை ஆசிரியர் வடிவேல் தேவராஜாவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வீரகேசரியின் இணை ஆசிரியருக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பினர் சிறிலங்கா அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு கடிதம் ஒன்றையும் ஊடகவியலாளர்களுக்கான அமைப்பு அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சிவராம் கடத்திக் கொல்லப் பட்டபோது அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் தேவராஜ் இருந்தார்.

சிவராம் கொல்லப்பட்டதற்குப் பின் இரு நாட்களுக்குப் பிறகு தேவராஜ் வீட்டுக்குவந்த தொலைபேசி அழைப்பை அவரது மருமகள் எடுத்துள்ளார்.



அப்போது அடுத்து தேவாராஜ் கொல்லப்படுவார் என்று மறுமுனையில் பேசிய நபர் எச்சரித்துள்ளார். இதைக் கடந்த முதலாம்திகதி வீடு திரும்பிய தேவராஜிடம் அவரது மருமகள் தெரிவித்துள்ளார்.

சிவராமின் வீட்டுக்கு தேவராஜ் அஞ்சலி செலுத்தச் சென்றிருந்த ஆறு மணிநேரமும் சந்தேகத்துக்குரியதான சாம்பல் நிறவாகனத்தை அவர் அவதானித்துள்ளார். இதே மாதிரியான வாகனம்தான் சிவராமைக் கடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இரவு வீட்டிற்குத் திரும்பிய தேவராஜ் நள்ளிரவில் சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது அதே சாம்பல் நிற வாகனம் அவரது இல்லத்திலிருந்து சிறிது தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

அதற்கடுத்தநாள் இனந்தெரியாத நபர்களிடமிருந்து தொலைபேசி மூலமாக அவரது அலுவலகத்திற்கு தொடர்ச்சியாக கொலை அச்சுறுத்தல்கள் வந்துகொண்டிருந்தன. இந் நிலையில் தேவராஜ் கடந்த ஐந்தாம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை கனடாசென்றிருந்தார். தற்போது கொழும்பு திரும்பியுள்ள அவருக்கு இதுவரை எவ்வித அச்சுறுத்தல்களும் வரவில்லை. உடனே தேவராஜுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கூறப் பட்டுள்ளது.

### பதிவுசெய்யக்கோரல்

ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களின் நியமனம் தொடர்பான நேர்முகத் தரவுதிரட்டலுக்காக கூட்டமொன்று நாளை பிற்பகல் 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு ம.வியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் அனைத்து ஆங்கில ஆசிரியர்களையும், தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# இனம்தெரியாதோரால் சுடப்பட்ட சூரியமூர்த்தி நேற்று மரணம்

திருகோணமலை முன்னாள் நகரசபைத் தலைவர் பெரியபோடி சூரியமூர்த்தி நேற்றுக்காலை கொழும்பு தேசிய வைத்திசாலையில் மரணமானார்.

கடந்த 18 ஆம்திகதி இரவு திருகோணமலையில் அவரது இல்லத்தில் இனம் தெரியாதோரால் சுடப்பட்ட இவர் திருமலை வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு இரத்தப்பெருக்கு கட்டுப்படாமையால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சைக்கு உட்பட்ட இவர் நேற்று மரணமானதாக வைத்தியசாலைத் தரப்புக்கள் உறுதி செய்துள்ளன.

இவர் 2004இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின்தலைவர் வீ. ஆனந்தசங்கரியின் சுயேட்சைக்குழுவில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

### திருமலை புத்தர்...

பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்

நகரின் பேருந்து மையத்தின் அருகில் புத்தர்சிலைஒன்று நிறுவப்பட்டமையை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்கும் வகையிலேயே இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வடக்கு கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவின் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் செயலர் அசோக ஜெயவர்தன, சனாதிபதியின் ஆலோசகர் ஹரிம் பீரிஸ், கிழக்கின் படைஅதிகாரிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர் சம்பந்தன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

எனினும் வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பு மற்றும் பௌத்த பிக்குகளின் அமைப்பு என்பன இதில் பங்கேற்கவில்லை.இதேவேளை நேற்றுப் பிற்பகல் சனாதிபதிக்கும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். சம்பந்தனுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்றுசுமார் ஒன்றரை மணித்தியாலங்களாக இடம்பெற்றுள்ளது இதனையடுத்தே சனாதிபதியின் உத்தரவின் பேரில் விசேட உலங்குவானூர்தியில் அரசாங்க தரப்பினருடன் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனும் திருகோணமலைக்கு திரும்பி நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றனர். (32)

### பிற்போடல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட உயர் நிலைப்பள்ளிகளுக்கிடையில் நாளை நடைபெறவிருந்த பட்டிமன்றம் ஹர்த்தாலினை முன்னிட்டு நடைபெறமாட்டாதெனவும், மேற்படி பட்டிமன்றம் நாளை மறுதினம் 28ஆம்திகதி காலை 9.00மணிக்கு கிளி.நொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதென கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா தெரிவித்துள்ளார். (சோ)

****

(புதுக்குடியிருப்பு)

வடக்கு கிழக்குப் பகுதி எங்கும் 27ஆம்திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் முல்லை. மாவட்ட பள்ளிகளுக்கு இடையிலான மென்பந்து, துடுப்பாட்டம்,பெண்களுக்கான எல்லே, ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் 30ஆம் திகதி உரிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இதனைச் சம்பந்தப்பட்ட பள்ளிகள் கவனத்தில் கொள்ளுமாறு முல்லை. வலயக் கல்விப்பணிப்பாளர் அறியத்தருகின்றார். (08)

### தேசிய...

கான பெருவிளையாட்டுப்போட்டி 2006 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம்திகதி மாற்றப்பட்டுள்ளது. என்பதனை அனைவருக்கும் அறியத்தருவதுடன், வருடாந்த தேசிய போட்டியில் நடாத்தப்படும் லெப்.கேணல் விக்ரர் நினைவான தேசிய கால்பந்து சுற்றுப்போட்டி இவ்வருடம் யூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகளின் பல அணிகளுடன் தமிழீழ தாயக எட்டு மாவட்ட அணிகளும் இணைத்த தேசிய போட்டியாக லீக்முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. எனவே மாவட்ட கால்பந்து அணிகளை தயார்ப் படுத்திக்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட விளையாட்டுத்துறை சார்ந்த அனைவரும் கேட்டுக்கொளளப்படுகின்றனர்.

### திருமலை

நாளை வெள்ளிக்கிழமை நடக்கவுள்ள .இந்தப் பூரண ஹர்த்தால் கதவடைப்பு போராட்டத்திற்கான ஏற்பாடுகள் மும்மரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை காணக் கூடியதாக உள்ளது.

### அரசியல்...

தீர்மானித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.நாளை பிற்பகல் மூன்று மணிமுதல் 4மணிவரைமக்கள் விடுதலை முன்னணியினரை சனாதிபதி சந்திக்கவுள்ளார்.அதன் பின்னர் இடம்பெறும் சந்திப்பில்கலந்துகொள்ளுமாறுஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### திருமலையில்...

ஆயுதக்குழுக்களாலும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளால் யுத்த நிறுத்தசூழலே முழு அளவில் கேள்விக்குறியாகியுள்ளது. அண்மைய காலங்களில் எங்களது பத்திரிகையாளர்களும், புத்திஜீவிகளும் கொல்லப்படுவதும் அதிகரித்து வருகிறது. இதிலும் குறிப்பாகத் திருகோணமலையில் தற்போது நடைபெற்றுவரும் இனக்கலவரத்தை தூண்டும் முயற்சிகள் போன்ற விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்தியிருக்கிறோம்.

இத்தகைய சம்பவங்களின் பின்னால் இலங்கைப்படையினர்தான் இருக்கிறார்கள். அவர்கள்தான் இதனை முன்னின்று செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களது மக்கள் மத்தியில் மதக்கலவரத்தைத் தூண்டி இனக்கலவரமாக உருவாக்கும் நோக்கோடுதான் இந்த செயற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ள இந்த நடவடிக்கை எல்லாப் பிரதேசங்களிலும் பரவக்கூடிய ஒரு ஆபத்தான நிலை உருவாகியுள்ளது என்பதையும் அவர்களுக்கு வலியுறுத்தினோம்.

இவற்றை விட பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கத்தினுடைய அசமந்தப் போக்கு, இழுத்தடிப்பு நிலைப்பாடு என்பவை பற்றியும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தினோம். ஏனெனில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்களைத் தொட்டுநிற்கின்ற சூழலில் இதுவரை அவர்களுக்கான எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை ஏற்கனவே கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக யுத்தத்நெருக்கடிக்குள் சிக்குண்டு, பாதிப்புற்று மனிதாபிமான நெருக்கடியை சந்தித்த மக்களுக்கு அவசர மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்த நிலையிலும், இதுவரை எந்த உதவிகளும் வழங்கப்படாத நிலையில் ஒட்டு மொத்தமாக மக்கள் அனைவரும் ஏமாற்றமடைந்தும் சலிப் படைந்தும் போயுள்ளார்கள்.

இது மட்டுமல்லாமல் சுனாமி அனர்த்தம் நடைபெற்று எங்கள் மக்கள் பேரழிவைச் சந்தித்த நிலையில் அதற்கும் தீவில்லாத நிலை தொடர்கின்றது. இதனாலும் எங்கள் மக்கள் முழுஅளவிலான நம்பிக்கையீனத்தை அடைந்து விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகைய போக்குத் தொடருமாக இருந்தால் எங்கள் மக்களின் கொந்தளிப்புநிலையை எவரும் சமாளிக்க முடியாத நிலை உருவாகும் என்கின்ற அபாய நிலைபற்றி சர்வதேச சமூகத்துக்கு இன்று எடுத்துரைத்திருக்கிறோம்.

அண்மை நாட்களாக திருகோணமலையில் அரசபடைகளும், சிங்கள இனவாதிகளும் தமிழ்மக்களின் மனதில் ஆறாதிருக்கும் பழையநினைவுகளை மீண்டும் தூண்டிவிடும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். தமிழர்தாயகப் பிரதேசத்தை சிங்கள மயப்படுத்துவதும், சிங்கள ஆக்கிரமிப்பைத் தொடருகின்ற குறியீடாகத்தான் புத்தர்சிலையைக் கொண்டுவந்து ஏனைய இன, மதமக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு பலாத்காரமாக நிறுவியுள்ளதுடன், மக்களது உணர்ச்சியைத் தூண்டி கலவரத்தை உருவாக்குகின்ற நோக்கோடுதான் இந்தக் காரியங்களை செய்து வருகின்றனர். இது முழுக்க முழுக்க தமிழ்மக்களுக்கு முன்னர் எப்படி சிங்களப் பேரினவாதிகள் தாயகப்பிரதேசங்களை ஆக்கிரமித்தார்களோ சிங்கள மயப்படுத்த முனைந்தார்களோ அதன் தொடர்ச்சியான போக்கையே இப்போது வெளிப்படையாக ஆற்றத் தொடங்கியிருக்கிறார்கள். இது மிக மிக ஆபத்தான ஒரு சூழலை நாடு முழுவதும் ஏற்படுத்தப்போகிறது என்பதுதான் உண்மை. இது ஒரு பெரும் நெருக்கடி என்றார் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அவர்கள் மட்டு- அம்பறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் அவர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறிலங்காவுக்கான தூதுவர் வூட்டோ வில்சன், சிறிலங்காவுக்கான நெதர்லாந்துத் தூதுவர் சுசான் ஹிளங்கட் அம்மையார் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி சந்திப்பு 12.பி.30 வரை நீடித்தது (லோ)

### சட்ட...

தெரிவித்துள்ளது.

அத்துடன் மாவட்ட ரீதியில் நாளை பூரண ஹர்த்தால் அனுட்டிக்கவும் அழைப்பு விடுத்துள்ளது, எனவே வவுனியா மாவட்ட பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், அரச அரசசார்பற்ற நிறுவணங்கள்,தனியார் அமைப்புக்கள், நிறுவனங்கள், பேருந்து சேவைகள் அனைத்துச் செயற்பாடுகளையும் நிறுத்தி ஸ்தம்பிதம் அடையச்செய்வதனூடாக ஹர்த்தாலை பூரண வெற்றி அடையச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது. இதன் பிரதிகள் இலங்கைபோர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு,அரச அதிபர், பிரதேச செயலாளர், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலைய அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.